விபாஷா

2015 ஜனவரி – பெப்ரவரி இதழ் | மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பிரசுரம் | மலர் 2 | இதழ் 18

ஒரே வானத்தின் கீழ்
இருள் நீங்கட்டும் !
வேற்றுமையின்றி
அனைவருக்கும்
ஒளி பரவட்டும் !
வீசும் தென்றலில்
அன்பு திரளட்டும்

போக்குவரத்துச் சேவையில் மொழி உரிமை – 4

பூவுலகின் அனற்பொறி – 9

இலங்கையின் முதலாவது சிங்கள தமிழ் மாணவர் இலக்கிய விழா – 14

உள்ளடக்கம்

ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டத்தின் 4 ஆண்டு அனுபவம் **2-3**

போக்குவரத்துச் சேவையில் மொழி உரிமை **4**

மொழி உரிமைகளுக்கான ஒன்றிணைவு
ஒரு செயற்பாட்டாளரின் பார்வையில் **6**

பூவுலகின் அனற்பொறி தீப்பற்றாத மலர்க்கொத்து **9**

மொழிச் சங்கங்கள் ஏற்படுத்திய மாற்றங்கள் **12**

இலங்கையின் முதலாவது
சிங்கள தமிழ் மாணவர் இலக்கிய விருது வழங்கும் விழா **14**

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமும் மொழிபெயர்ப்பு இலக்கியமும் **18**

மொழி உரிமைகளுக்காக முறைப்பாடு செய்தல் **21**

மொழி உரிமைகள் தொடர்பான நூல்கள் **25**

சர்வதேச தாய் மொழித் தினம் **26**

கிராமம் தோறும் மொழி உரிமை **27**

விபாஷா

இதழ் 18 ஜனவரி – பெப்ரவரி 2015

தொலைபேசி 94-1-2370801/4 ஃபக்ஸ் 94-1-2370802 மின்னஞ்சல் cpa@cpalanka.org இணையதளம் www.cpalanka.org

அன்று தொடக்கம் இன்று வரையான மொழிப் போராட்டம்

இலங்கை மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளைத் தாம் அறிந்த மொழியில் மேற்கொள்வதற்கு நேர்ந்த ஒரு காலம் இலங்கை நாட்டில்காணப்பட்டது.அன்று இப்பிரச்சினைக்கு சிங்களம், தமிழ் என்ற பாகுபாடு இருக்கவில்லை. ஆங்கிலம் தெரியாத அனைவரும் அன்று பொதுவான இப்பிரச்சினையை எதிர்நோக்கினர்.1948 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பின்னரும் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. குடியேற்றவாத யுகத்தைப் போன்றே அதன் பின்னரும் இலங்கையின் அரச கரும மொழியாக ஆங்கிலம் மாத்திரமே அமுலில் இருந்தமையே இதற்கான காரணமாகும்.

இந்நிலைமைக்கு எதிராக சுயமொழிப் போராட்டமானது குடியேற்றவாத யுகத்தில் ஆரம்பித்து, அதன் பின்னரும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது.சுதந்திரத்தின் பின்னர் இப் போராட்டமானது மிகவும் சிக்கல் நிறைந்த வடிவமாக உருவெடுத்தது எனக்கூறலாம்.அதன் போது விசேடமாக 50 ஆவது தசாப்தம் முக்கியமான ஒரு யுகமாக இருந்தது. சிங்களம் மற்றும் தமிழ் என இலங்கையின் சுயமொழிப் போராட்டம் இரு முகாம்களாக பிரிந்து சென்றமை அந்த யுகத்தில் உறுதிசெய்யப்பட்டமையே அதற்கான காரணமாகும்.

அன்று தொடக்கம் இப்போராட்டமானது ஆங்கிலத்தின் ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு போராட்ட நிலைமையிலிருந்து தடம் மாறி, தமது சிநேக பூர்வமான உள்நாட்டு மொழிக்கு எதிரான ஒரு போராட்டமாக மாறியது.

சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக்கும் கோஷமானது இது வரை நிலவிய சுயமொழிப் போராட்டத்தின் முற்போக்கு வடிவத்திற்கு ஒரு சவாலாக மாறியது. எவ்வாறாயினும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்தினை பெற்றுத் தரும் போராட்டத்தை இந்நாட்டு வரலாற்றிலிருந்து முற்றுமுழுதாக இல்லாதொழிப்பதற்கு எவராலும் முடியவில்லை. தனது இருப்பினை பணயம் வைத்து அதற்காக முன்வந்த சமூக மற்றும் அரசியல் செயற்பாடுகள் இந்நாட்டு வரலாற்றில் காணப்பட்டது. அப்போராட்டத்தின் மரபுரிமையானது அளவுகடந்த தடைகளின் மத்தியிலும் இது வரை முன்னோக்கி நகர்ந்துள்ளது.

இந்நிலைமைகளின் கீழ் ஆரம்பமான சிங்கள மொழி மாத்திரம் இந்நாட்டின் அரச கரும மொழியாக மாறினாலும் கூட இரண்டாவதாக தமிழ் மொழியும் அரச கரும மொழியாக மாறி தற்போது இலங்கை இருமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் ஒரு நாடாக மாறியுள்ளது.

ஒப்பீட்டு ரீதியில் அது திருப்தியுரக்கூடிய ஒரு நிலைமையாக காணப்படுகின்ற போதும் சுயமொழிப் போராட்டத்தின் அனைத்துக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது அதன் மூலம் கருதப்படுவதில்லை. ஏற்புடைய சட்ட விதிகள் மற்றும் சட்டங்கள் எவ்வளவு தான் காணப்பட்ட போதும் அவற்றை அமுல்படுத்துதல் தொடர்பாக பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றமையே அதற்கான காரணமாகும். இவ்வாறான நிலைமைகளின் கீழ் இந்நாட்டு சுயமொழிப் போராட்டத்தின் இரண்டு யுகங்களை எம்மால் இனங்காண முடியும். இலங்கைக்கு இரு மொழிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னரான யுகம் மற்றும் அதற்கு முற்பட்ட யுகம் ஆகியனவே அவையாகும்.

இரு மொழிக்கொள்கைக்கு முன்னர் காணப்பட்ட யுகம் துன்பம் நிறைந்ததாகும். மொழி தொடர்பான உரிமைக்காக நேரடியான போராட்டம் அன்று நிலவியது. சில சமயங்களில் அது உயிர்களையும் சொத்துக்களையும் பலிகொள்ளும் மனிதாபிமானப் போராட்டமாக மாறியிருந்தது. பிற்காலத்தில் நீண்ட மற்றும் பயங்கரமான ஒரு யுத்தம் உருவாவதற்கு வழிவகுத்த காரணங்கள் மேலெழுந்ததும். இம்மோதல்கள் நிறைந்த சூழலின் மூலமே என்பதை இனங்கான முடியும்.

எவ்வாறாயினும் இம் மோதல் நிறைந்த யுத்தத்தின் போது இருமொழிக் கொள்கையானது இந்த நாட்டின் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டு இந் நாட்டின் பொதுவான சட்டமாக மாறியது. அது தீர்க்கமான ஒரு வெற்றியாக காணப்பட்ட போதும் அதன் மூலம் சுயமொழி உரிமைக்கான போராட்டத்தின் நிறைவாக காணப்பட்டது. எனக் கூற முடியாது.

அதனைத் தொடர்ந்து வேறு ஒரு போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. விழிப்புணர்வு பெறல் மற்றும் அவ் விழிப்புணர்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தலையீடு என்பனவே அதன் அடிப்படை அம்சங்களாகும். மேலோட்டமாகப் பார்ப்போமேயானால் இப் போராட்டமானது முன்னர் குறிப்பிட்டதைப் போல் சிக்கலானதல்ல. எனினும் அதன் மூலம் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

சட்டத்தின் மூலம் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்ட போதும் அது தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு காணப்படாவிடின் சட்டம் மாத்திரம் போதுமானதல்ல. சுயமொழியில் கருமமாற்றலானது தமது உரிமை என்பதையும் அவ் உரிமைகளுக்காக தாம் செயல்ரீதியாக தலையிட வேண்டும் என்பதையும் மக்கள் அறிந்திருத்தல் இவ் யுகத்தின் தலையாய தேவைப்பாடு ஆகும்.

அதன்பொருட்டு மக்களின் கல்வித் துறையின் விரிவான செயற்பாட்டின் தேவை தற்போது எழுந்துள்ளது. அதன்போது ஊடகத்திற்குப் பாரிய பணியொன்றை மேற்கொள்ளக் கூடியதாயுள்ளது. கடந்த காலங்களில் விபாஷா செய்திமடல் இப் பணிப்பொறுப்பினையே ஆற்றி வந்தது.

அது தவிர சிறுபான்மையின மக்களின் மொழி உரிமையை மேம்படுத்தும் கருத்திட்டங்கள் மூலம் கடந்த கால எல்லைக்குள் மேற்குறித்த நோக்கங்களின் பொருட்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அந் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகவும் அதன் விளைவு தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கு இவ்வார விபாஷா செய்தி மடல் முற்று முழுதாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயினும் அதன் மூலம் மாத்திரம் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் அனைத்து கோணங்கள் பற்றியும் முற்று முழுதாக கலந்துரையாட முடியாது. அவ்வளவு விரிந்த வீச்சில் இச் செயற்பாடு வியாபித்துக் காணப்படுவதே இதற்கான காரணமாகும்.

எவ்வாறாயினும் அரச அலுவலர்கள் தொடக்கம் சாதாரண பொது மக்கள் வரையான நபர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் இந் நாட்டின் சுயமொழி உரிமைகள் தொடர்பான போராட்டத்தில் குறிப்பிடத்தக்க பண்பு ரீதியான ஒரு மாற்றம் இவ் யுகத்தினுள் ஏற்பட்டதென்பது மிகத் தெளிவாகிறது.

விசேடமாக இச் செயன்முறைகளைத் தொடர்ந்து பிரதேச ரீதியாக கட்டியெழுப்பப்பட்ட மொழிச் சங்கங்கள் மற்றும் பிரஜைகள் அமைப்புக்கள் உள்ளிட்ட மக்கள் அமைப்பு வலைப்பின்னலினூடாக நிகழ்ந்த பணியும் இங்கு தீர்க்கமான ஒன்றாக அமைந்தது எனக் கூறலாம்.

விசேடமாக இப் பிரஜைகள் அமைப்புக்களின் செயற்பாட்டின் முக்கியத்துவத்தை கடந்த காலத்துக்கு மாத்திரம் வரையறுக்க முடியாது. எதிர்காலத்தில் இந்நாட்டு சுயமொழி உரிமைகளை உறுதிசெய்யும் போராட்டத்தின் தீர்க்கமான ஒரு நடிபங்கு அவர்கள் வசமுள்ளது. மொழி உரிமைகள் தொடர்பான இந்நாட்டு மக்களை அறிவூட்டுதல் மற்றும் வலுவடையச் செய்தல் என்பவற்றுக்காக இது வரை முன்னெடுத்த போராட்டத்தை தொடர்ந்தும் வலுவுடன் முன்னெடுத்துச் செல்லும் சவாலானது இவ் அமைப்பு வலைப்பின்னல் உள்ளிட்ட எம் அனைவர் முன்னும் காணப்படுகிறது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

24/2, 28 வது ஒழுங்கை, ஃப்ளவர் வீதி, கொழும்பு -07

தொலைபேசி 94-11-2565304/06 ஃபக்ஸ் 94-11-4714460 மின்னஞ்சல் cpa@cpalanka.org இணையதளம் www.cpalanka.org

இலங்கையானது பல்கலாசார மற்றும் மொழி தொடர்பான மரபுரிமைகள் என்பவற்றின் மூலம் தன்னிறைவு பெற்ற ஒரு நாடாகும். எந்தவொரு சமூகத்திற்கும் ஒரு வளமாகக் காணப்பட வேண்டிய இப் பல்கலாசாரமானது இந்த நாட்டில் ஒரு பேரழிவை ஏற்படுத்திய விதத்தினைக் கடந்த முப்பதாண்டுகள் பூராக இலங்கை வாழ் மக்கள் அனுபவித்து வந்தனர். ஆயினும் இப்பல்லினத் தன்மையினை உரிய முறையில் முகாமை செய்து அதனோடிணைந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மீது மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் பிரஜைகள் பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் கவனம் பல காலங்களுக்கு முன்பிருந்தே ஈர்க்கப்பட்டிருந்தது.

சிறுபான்மை இனத்தவரின் மொழி உரிமை மேம்பாடு, ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டத்தின் நான்காண்டு அனுபவம்

இலங்கையானது பல்கலாசார மற்றும் மொழி தொடர்பான மரபுரிமைகள் என்பவற்றின் மூலம் தன்னிறைவு பெற்ற ஒரு நாடாகும். எந்தவொரு சமூகத்திற்கும் ஒரு வளமாகக் காணப்பட வேண்டிய இவ் பல்கலாசாரமானது இந்த நாட்டில் ஒரு பேரழிவை உண்டுபன்னிய விதத்தினைக் கடந்த முப்பதாண்டுகள் பூராக இலங்கை வாழ் மக்கள் அனுபவித்து வந்தனர். ஆயினும் இப்பல்லினத் தன்மையினை உரிய முறையில் முகாமை செய்து அதனோடிணைந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மீது மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் பிரஜைகள் பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் கவனம் பல காலங்களுக்கு முன்பிருந்தே ஈர்க்கப்பட்டிருந்தது.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுள் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான நான்காண்டு கால எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறுபான்மையினச் சமூகத்தின் மொழி உரிமை மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட பணி மிக உன்னதமானதொன்றாகும். அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றிகள் அளப்பரியனவாகும்.

இருமொழிப் பிரிவுகளென அரசினால் இனங்காணப்பட்ட பிரதேசத்தில் பங்காளி அமைப்புக்களுடன் இணைந்து மொழிச் சங்கங்களைத் தாபிப்பதன் வாயிலாக இந் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இம் மொழிச் சங்கங்கள் அமுல்படுத்தப்படும் பிரதான மாவட்டங்களாக அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்பு, நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை, கிளிநொச்சி, களுத்துறை ஆகிய மாவட்டங்கள் காணப்படுகின்றன. மொழிச் சங்கங்களினூடாக பிரதானமாக அவ்வந்த பிராந்தியங்களிலுள்ள மக்களுக்கு மொழி உரிமைகள் பற்றி அறிவூட்டுதல், மொழி உரிமைகள் மீறப்படும் போது அது தொடர்பில் தெரிபடுவதற்கு உரிய வழிகாட்டல்களை மேற்கொள்ளல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. 2014 டிசம்பர் மாதமளவில் 15 மாவட்டங்களில் தாபிக்கப்பட்ட

சுதர்ஷனி குமாரி தமுனுபொல

மொழிச்சங்கங்களின் எண்ணிக்கை 449 என்பதுடன் அச் சங்கங்களுக்கு உரித்தான அங்கத்தவர் எண்ணிக்கை 794 ஆகும்.

அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பவற்றின் மூலம் என்னதான் எடுத்துரைக்கப்பட்டாலும் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற முனைகின்ற போது பிரஜைகளின் உரிமைகள் மீறப்படலானது சர்வசாதாரண ஓர் அனுபவமாகக் காணப்பட்டது. அது தொடர்பான முறைப்பாடுகளை அவதானித்து அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பது மொழிச் சங்கங்களின் முக்கிய பணியாக இருந்தது. அதனோடு தொடர்புடைய முறைப்பாடுகளை நேரடியாக ஏற்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பி அல்லது மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து மொழி உரிமைகளை வென்றெடுப்பதற்கான மக்கள் பணிக்கு பங்களிப்புச் செய்தல் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 3180 முறைப்பாடுகளும் அம்பாறை மாவட்டத்திலிருந்து 2805 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றன.

அரச துறையிலும் தனியார் துறையிலும் மொழி உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் இலங்கை அரச கரும மொழிகள் ஆணைக் குழுவிற்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. முதலாம் கட்டத்தின் போது 24 முறைப்பாடுகளும் இரண்டாம் கட்டத்தின் போதும் மூன்றாம் கட்டத்தின் போதும் 107 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. நான்காம் கட்டத்தின் போது 2015 ஜனவரி மாதமளவில் 105 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பல்வேறு அளவுகோள், கோணங்கள் மற்றும் பிரிவுகள் என்பவற்றின் கீழ் இம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இம் முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டதன் பின்னர் பல்வேறு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மருந்துப் பொதிகளில் சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளில் அவை தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்படாமை மிக முக்கியமானதாகும். அவ்வாறே பண நோட்டுக்களின் அத்தியாவசிய வாசகங்கள் தமிழ் மொழியிலும் உள்ளடக்கப்படல், தேசிய அடையாள அட்டையிலுள்ள தகவல்கள் தமிழ் மொழியிலும் குறிப்பிடப்படல் இவற்றுள் முக்கியத்துவம் பெறும் ஏனைய பரிந்துரைகள் சிலவாகும்.

அவ்வாறே மொழிச் சங்கங்களின் தலையீட்டினால் ஒரு மொழியில் மாத்திரம் சேவை வழங்கும் இடங்களில் மாத்திரம் காணப்படும் பெயர்ப்பலகைகளை இரு மொழிகளாக அல்லது மும்மொழிகளாக மாற்றுவதற்கான ஆற்றல் இங்கு கிடைக்கப்பெற்றன.

2014 டிசம்பர் மாதமளவில் அரச நிறுவனங்களில் அவ்வாறான 1920 மாற்றங்களையும், பொது இடங்களில் 2550 மாற்றங்களையும் ஏற்படுத்த முடிந்தமையானது ஒரு முன்னேற்றகரமான நிலைமையாகும். அது மாத்திரமன்றி தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, சிறுபான்மையினரின் மொழி உரிமைகளை மேம்படுத்தும் பொருட்டு பிரஜைகளின் மொழி தொடர்பான முறைப்பாடுகளை அறிவிப்பதற்காக அறிமுகப்படுத்திய "1956" எனும் அவசர அழைப்பு இலக்கத்தை உள்ளடக்கிய பெயர்ப் பலகைகளை

பல்வேறு அளவுகோள், கோணங்கள் மற்றும் பிரிவுகள் என்பவற்றின் கீழ் இம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இம் முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டதன் பின்னர் பல்வேறு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மருந்துப் பொதிகளில் சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளில் அவை தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்படாமை மிக முக்கியமானதாகும். அவ்வாறே பண நோட்டுக்களின் அத்தியாவசிய வாசகங்கள் தமிழ் மொழியிலும் உள்ளடக்கப்படல், தேசிய அடையாள அட்டையிலுள்ள தகவல்கள் தமிழ் மொழியிலும் குறிப்பிடப்படல் இவற்றுள் முக்கியத்துவம் பெறும் ஏனைய பரிந்துரைகள் சிலவாகும்.

அவ்வாறே மொழிச் சங்கங்களின் தலையீட்டினால் ஒரு மொழியில் மாத்திரம் சேவை வழங்கும் இடங்களையும் தனிநபர்களையும் இணங்காண முடிந்துள்ளது. ஒரு மொழியில் மாத்திரம் காணப்படும் பெயர்ப் பலகைகளை இரு மொழிகளாக அல்லது மும்மொழிகளாக மாற்றுவதற்கான ஆற்றல் இங்கு கிடைக்கப்பெற்றன.

2014 டிசம்பர் மாதமள்வில் அரச நிறுவனங்களில் அவ்வாறான 1920 மாற்றங்களையும், பொது இடங்களில் 2550 மாற்றங்களையும் ஏற்படுத்த முடிந்தமையானது ஒரு முன்னேற்றகரமான நிலைமையாகும். அது மாத்திரமன்றி தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, சிறுபான்மையினரின் மொழி உரிமைகளை மேம்படுத்தும் பொருட்டு பிரஜைகளின் மொழி தொடர்பான முறைப்பாடுகளை அறிவிப்பதற்காக

அறிமுகப்படுத்திய “1956” எனும் அவசர அழைப்பு இலக்கத்தை உள்ளடக்கிய பெயர்ப் பலகைகளை பல்வேறு மாகாணங்களில் நிறுவுவதற்காக தலையீட்டினை மேற்கொண்டது.

இருமொழிக் கொள்கை தொடர்பான அரச அலுவலர்களுக்கு அறிவூட்டும் நோக்கில் நாடளாவிய ரீதியான இருமொழி மாவட்டங்களில் 2014 ஆம் ஆண்டில் மாத்திரம் 39 இடங்களில் 1500 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டப் பட்டுள்ளது. அதன் போது அரச உத்தியோகத்தர்களுடன் இருமொழிக்கொள்கை தொடர்பான சட்டச் சூழல் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் இருமொழிப் பாவனை தொடர்பான அவரவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அனுபவங்கள் என்பன தொடர்பாக வெளிப்படையாக கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றது. சிறுபான்மையினரின் மொழி உரிமைகளை மேம்படுத்தும் செயன்முறையில் நிரந்தர முகவரிகள் அற்ற தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்காக நிரந்தர முகவரிகள் வழங்கும் வேலைத்திட்டம் 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. பதுளை, பசறை, ஆகரபத்தனை மக்களுக்கான நிரந்தர விலாசம் 2013 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்றது. அதாவது பிறந்த நாள் முதல் தனது வீட்டிற்கு நிரந்தர அடையாளமின்றி இருந்த தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொண்ட பல்வேறு விதமான இன்னல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் உதவியுடன் ஊவா சக்தி மன்றம் இம் முகவரிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தியது. அந் நிகழ்ச்சித் திட்டமே விலாசம் என அழைக்கப்படுகிறது.

விலாசங்கள் இல்லாத தோட்ட மக்களின் இன்னோரன்ன பிரச்சினைகளும் அவலங்களும் தொடர்பான விவரணத் திரைப்படம் மற்றும் விவரண நூல் என்பன 2013 டிசம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்துடன் இணைந்ததாக வெளியீடு செய்துவைக்கப்பட்டது.

“மொழி உரிமை” என்பது ஒட்டுமொத்த மனித மானுட சமூகத்திற்கு உரிமை கோருவதற்கான ஓர் உரிமையாவதுடன் நாளைய உலகைப் பொறுப்பேற்கவுள்ள சிறுவர் சிறுமியரே அதன் மீது கூருணர்வுடன் தொடர்புபடுகின்றனர். அதனடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கான ஒரு கட்டுரைப் போட்டித் தொடர் 2013 மார்ச் மாதம் முன்னெடுக்கப்பட்டது. மொழி உரிமையும் மானுட நேயமும் எனும் தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்ட இம் மாணவர் கட்டுரைப் போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அவ்வாறே மொழி உரிமை தொடர்பான அறிவுத் திறன் மனப்பாங்கு என்பவற்றை விரிவுபடுத்துவதற்கான விளக்க ரீதியான ஒரு நிகழ்ச்சியும் பரிசுகள் வழங்கும் நிகழ்வின் போது முன்னெடுக்கப்பட்டது.

மனிதர்களாக பிறந்ததன் காரணமாக எதுவித பாகுபாடும் இன்றி மனித உரிமைகள் மாத்திரமே உரித்தாகுதல் வேண்டும். அதன்போது மானுடத்தின் வெளியீட்டு ஊடகமாக முதனிலையான அந்தஸ்து மொழிக்கு வழங்கப்படுகிறது. 2011–2013 வரையான கால எல்லைக்குள் டிசம்பர் 10 ஆம் திகதியில் அனுஷ்டிக்கப்படும் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வினையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் கொழும்பு நகரை மையமாகக் கொண்டு இடம்பெற்றன. அவ்வாறே 2014 ஆம் ஆண்டின் சர்வதேச மனித உரிமைகள் தினம் இலங்கை பூராவும் 12 இடங்களில் இடம்பெற்றன. இந் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள், தொழில்சார் நிபுணர்கள், புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை இணைத்து “மொழி உரிமை” யை அடிப்படையாகக் கொண்டு மனித உரிமையின் பல்வேறு கோணங்கள் பற்றி பல்வேறு அளவுகோள்களினூடாக கவனஞ் செலுத்தப்பட்டது.

மொழி உரிமைகள் தொடர்பாக நாட்டின் பொது மக்களுக்கு அறிவூட்டும் முக்கியமானதொரு பணிப்பொறுப்பு நேரடியாக ஊடகங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. அந் நேரடி பணிப்பொறுப்பு தொடர்பாக ஊடகவியலாளர் அறிவு பெற்றுள்ளாரா செயற்படுகிறாரா என்ற கேள்வியும் இதன் போது எழுப்பப்பட்டது. அதற்கமைய “மொழி உரிமை” தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டும் ஒரு பணியாகவும் இது தொடர்பாக அறிவுபெறல் ஊடகவியலாளரின் தலையாய பணி என்பதால் ஊடகவியலாளர்களை அறிவூட்டும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் 2013 ஆம் ஏற்பாடு செய்யப்பட்டன.

இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தினைக் கட்டியெழுப்பும் பணிகளாக அவரவர்களுக்கிடையே நிலவும் கலாசார உறவுகள் மற்றும் புரிந்துணர்வு என்பவற்றை இனங்காண முடியும். அதற்கமைய சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையே காணப்படும் மொழிரீதியான விரிசலினை சற்று மறந்து கலாசார ஒருமைப்பாட்டினை நோக்கி ஒன்றிணையும் நோக்கில் தமிழ், சிங்களம், முஸ்லிம் இனக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் இக்கால எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அதற்கமைய 2012 ஆம் ஆண்டு கந்தளாய், பானம, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்கள் மையப்படுத்தப்பட்டன. இங்கு சிங்களம் தமிழ், முஸ்லிம் இனச் சகோதரர்களின் குடும்ப உறவுப் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. சிங்களம், தமிழ் நண்பர்களின் வீடுகளில் தங்கியிருந்து அவர்களின் கலாசாரம் பழக்கவழக்கங்கள் இரசனை மார்க்கங்கள் என்பவற்றை சீர்செய்துகொள்ளல் இங்கு இடம்பெற்றன.

எவ்வளவு தான் மொழிரீதியானதும் கலாசார ரீதியிலானதுமான வேறுபாடுகள் காணப்பட்ட போதும் அவ் அனைத்து வேறுபாடுகளையும் மறந்து பொது மனிதாபிமான உணர்வுடன் பிண்ணிப் பிணைவதற்கு இந் நிகழ்ச்சியில் கலந்துகொண்டோர் திறமை பெற்றனர்.

மொழி உரிமை தொடர்பான பிரச்சினைகள் நிலவும் மற்றுமொரு துறையாக இந் நிகழ்ச்சித் திட்டத்தின் போது பொதுப் போக்குவரத்துத் துறை இனங்காணப்பட்டது. பொதுப் போக்குவரத்து முறைமை என்பது இலங்கையில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய எதுவித பாகுபாடுமின்றி பொது மக்களுக்கான போக்குவரத்து வசதிகளை வழங்கும் ஓர் ஊடகமாகும். அதன் காரணமாகவே இப் போக்குவரத்துச் சேவையுடன் தொடர்பான பஸ் வண்டிகளின் பெயர்ப்பலகைகள் இரு மொழிகளில் குறிப்பிடப்படல் அத்தியாவசியமாக அமைகிறது. இது தொடர்பாக மக்களின் மொழி உரிமைகள் மீறப்படல் தொடர்பான பல முறைப்பாடுகள் இக்கால எல்லைக்குள் இலங்கை அரச கரும மொழிகள் ஆணைக்குழுவிடமும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் போது அவற்றுக்கான தீர்வுகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுகின்றனவா எனக் கண்டறிய நேர்ந்தது. இலங்கையின் அனைத்து மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் அனைத்து பிரதேசங்களிலும் 2014/07/13 ஆம் திகதி பஸ் வண்டிகள் பற்றிய ஒரு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே நாட்டின் அனைத்து மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில், நாட்டின் அனைத்து மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் 2014.07.11 அன்று 32 புகையிரத நிலையங்களில் உரிய அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன்போது இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இலங்கை முழுவதிலுமுள்ள பஸ் வண்டிகளில் 72% இருமொழிகளிலான பஸ் வண்டிகளாகவும், 28% மானவை ஒரு மொழி பஸ் வண்டிகளாகவும், தனியார் துறையில் 11% ஒரு மொழி பஸ் வண்டிகளும், 89% இருமொழி பஸ் வண்டிகளும் உள்ளதென்பது தெளிவாகியது. அனைத்து மாகாணங்களிலும் இருமொழிக் கொள்கையினை அமுல்படுத்தும் பணி தொடர்பில் ஒரு முன்னேற்றம் காணப்படுகின்றமையினைக் காண முடிந்த வட மத்திய மாகாணத்தில் மாத்திரம் 55% வீதமாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். அவ்வாறே புகையிரத நிலைய அறிவித்தல்களின் போது நாடு பூராகவும் 27% இரு மொழி அறிவிப்புகளும் 73% ஒரு மொழி மூல அறிவிப்புகளும் இடம்பெறுவதாக அறியக் கிடைத்துள்ளது. இவ் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களினதும் ஒருங்கிணைப்புச் செய்த ஊடகமாக விபாஷா செய்தி மடலும் அதனோடிணைந்ததாக இரண்டுமாத இதழாக வெளியிடப்பட்டது. சிறுபான்மையினரின் மொழி உரிமைகளை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு செயற்பாடுகள் தொடர்பான வெளியீட்டு ஊடகமாக விபாஷா செய்தி மடல் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது.

2011 ஒக்டோபர் மாதம் துவக்கம் ஆரம்பிக்கப்பட்ட இச் செய்தி மடலின் முக்கியத்துவம் பல்வேறு கோணங்களில் கீழ் வலியுறுத்தப்பட முடியும். விசேடமாக இந்த நாட்டின் மொழி உரிமை தொடர்பாக சிங்களம், தமிழ் பாகுபாடு எதுவுமின்றி மக்களுக்கு அறிவூட்டுதல் இதனுள் பிரதானமானதாகும். அவ்வாறே மக்களுக்கு இதனோடு தொடர்புடைய பல்வேறு வகையான அனுபவங்களை பெற்றுத்தருவதற்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளைப் போன்றே இணையதளங்களில் வசிக்கும் ஆற்றலை மக்களுக்கு வழங்கி மொழிப் பிரச்சினை தொடர்பாக நாட்டு மக்களின் கவனத்தை ஈர்க்கச் செய்யும் தலையாய முயற்சியொன்றில் ஈடுபட்டு இது வரை 18 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளது.

போக்குவரத்துச் சேவையில் மொழி உரிமை

மக்களின் மொழி உரிமைகள் மீறப்படல் தொடர்பில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் காலத்திற்குக் காலம் இலங்கை அரச கரும மொழிகள் ஆணைக் குழுவிடமும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும், பல்வேறு முறைப்பாடுகளைச் சமர்ப்பித்துள்ளது. பொதுப் போக்குவரத்துச் சேவையானது மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஒரு முக்கிய பகுதி என்பதன் காரணமாகவே பொதுப் போக்குவரத்து துறையில் பிரசைகள் எதிர்நோக்கும் மொழி சார்ந்த பிரச்சினைகளை அனுகி அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதன் படி, 2012/09/01 ஆம் திகதி OLC/C/2012/w/1/4/,5 மற்றும் HRC/281/12, HRC/282/12 ஆம் இலக்கங்களைக் கொண்ட முறைப்பாடுகளினூடாக இலங்கைப் போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் வண்டிகளின் பெயர்ப்பலகைகள் மும்மொழிகளின் காட்சிப்படுத்தப்படாமை தொடர்பாக இலங்கை அரச கரும மொழிகள் ஆணைக்குழுவிடமும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே நாட்டின் பிரதான புகையிரத நிலையங்களில் அறிவிப்புப் பணிகள் மும்மொழிகளில் இடம்பெறாமை தொடர்பாக 2011/08/11 ஆம் திகதிய OLC/C/188 மற்றும் HRC/3463,3465,3466/11ஆம் இலக்க முறைப்பாடுகளினூடாக இலங்கை அரச கருகம மொழிகள் ஆணைக்குழுவிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் போது மேற்போந்த முறைப்பாடுகளுக்கு தீர்வு கிடைத்ததுடன் அவை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறா என்பதை அவதானிப்பதற்காக நாடளாவிய ரீதியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் 2014/07/30 ஆம் திகதி நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் பஸ் வண்டிகள் பற்றிய ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் போது இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் மற்றும் தனியார் பஸ் வண்டிகள் மாகாணங்களுக்குள் சேவையில் ஈடுபடும் பஸ்கள், மாகாணங்களுக்கிடையே சேவையில் ஈடுபடும் பஸ் வண்டிகள் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. அவ்வாறே நாட்டின் அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 2014/07/11 ஆம் திகதி 32 புகையிரத நிலையங்களில் உரிய அவதானிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வின் தரவுகளுக்கு அமைவாக நம்மால் பின்வரும் தீர்மானங்களுக்கு வர முடிந்தது.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகளில் பெயர்ப்பலகைகள் அரச கரும மொழிக் கொள்கைக்கு அமைவாக காட்சிப்படுத்தப்படுகின்றனவாக என்பது பற்றி பின்வரும் முடிவுகளுக்கு வரக் கூடியதாக இருந்தது. அதாவது, ஒட்டுமொத்தமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஒன்பது மாகாணங்களினதும் பஸ் வண்டிகளின் எண்ணிக்கை 2471 ஆகும். அவற்றுள் இருமொழி பெயர்ப்பலகைகளை உள்ளடக்கிய பஸ் வண்டிகளின் எண்ணிக்கை 1779 எனவும் ஒரு மொழி (சிங்களம் அல்லது தமிழ்) பெயர்ப்பலகைகளுடன் கூடிய பஸ் வண்டிகளின் எண்ணிக்கை 692 எனவும் இனங்காணப்பட்டது.



அவ் அந்த மாகாணங்களில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் இருமொழிக்கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட விதத்தினை சதவீதமாக நோக்கும் போது கிழக்கு மாகாணம் மாத்திரம்90% இற்கும் அதிகமான அளவில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு, மத்திய மற்றும் சபரகமுவ ஆகிய மாகாணங்களில் 70% இற்கு அதிகமான அளவு இருமொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் காணக் கிடைத்ததுடன் வடமேல், ஊவா தெற்கு மற்றும் மேற்கு ஆகிய ஐந்து மாகாணங்களிலும் 50 % இற்கும் அதிகமான வீதத்திலேயே இது காணப்பட்டது. இரு மொழிக் கொள்கையினை ஆகக் குறைந்த சதவீதத்தில் நடைமுறைப்படுத்தும் மாகாணமாக வடமத்திய மாகாணம் காணப்பட்டதுடன் அது 45% மாக காணப்பட்டது.

அவ்வாறே தனியார் பஸ்களின் பெயர்ப்பலகைகள் அரச கரும மொழிக் கொள்கைக்கு அமைய

துமிந்து
மதுஷான்

காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பாக பின்வரும் தீர்வுகளுக்கு வர முடிந்தது. அதாவது ஒட்டுமொத்தமாக நாடுபூராகவும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மொத்த தனியார் பஸ்களின் எண்ணிக்கை 4961 ஆகும். அவற்றுள் இருமொழிக் கொள்கை அமுல்படுத்தப்படும் பஸ்களின் எண்ணிக்கை 4396 எனும் பெரும்பான்மை அளவினைக் கொண்டிருப்பதுடன் 565 எனும் மிகச் சிறிய அளவு எண்ணிக்கையான பஸ்களிலேயே இரு மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது. இந் நிலைமையினை சதவீதமாக பின்வருமாறு காட்ட முடியும்.

அந்தந்த மாகாணங்களின் பஸ் வண்டிகளில் இருமொழிக்கொள்கை நடைமுறைப்படுத்தப்படல் எவ்வாறு இடம்பெற்றுள்ளதென்பது பற்றி மேலும் விளக்குவதாயின், அனைத்து மாகாணங்களிலும் இரு மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதில் ஓரளவு சாதகமான முன்னேற்றத்தினைக் காணலாம். அதன் போது வட மத்திய மாகாணத்தில் மாத்திரம் 55% மான அளவு குறித்த கொள்கையானது அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் ஏனைய அனைத்து மாகாணங்களிலும் 18 % இற்கும் அதிகமான அளவில் இருமொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதனைக் காண முடியும்.

ஒட்டுமொத்தமாக இலங்கைப் போக்குவரத்து சபை பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் ஆகியவற்றில் இருமொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதை பின்வருமாறு காண முடிந்தது.

இங்கு அனைத்து பஸ்களிலும் இருமொழிக்கொள்கை அமுல்படுத்தப்படும் சதவீதம் எனும் சாதகமான ஓர் அளவு எனவும் 17 % இருமொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் இனங் காண முடிந்தது.



இதனடிப்படையில் பஸ் வண்டிகளில் பெயர்ப்பலகைகள் காட்சிப்படுத்தப்படும் போது அரச கரும மொழிக் கொள்கை 100% உரியவாறு நடைமுறைப்படுத்தப்படாத போதும் அது சாதகமான ஒரு நிலையில் காணப்படுவது அவதானிக்கப்படலானது பிரஜைகளின் மொழி உரிமைகள் பாதுகாக்கப்படல் எனும் விடயத்தில் நாம் மாத்திரமன்றி ஒட்டுமொத்த பிரஜைகளும் பெற்றுக்கொண்ட ஒரு வெற்றியாகும் எனக் கருத முடியும்.

நாடளாவிய ரீதியில் புகையிரத நிலையங்களில் அறிவித்தல் பணிகள் இரு மொழிக் கொள்கையின் பிரகாரம் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பது பற்றி பின்வரும் தீர்மானங்களுக்கு வரக்கூடியதாயிருந்தது. அதாவது ஒட்டுமொத்தமாக நாடு பூராகவும் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் 32 புகையிரத நிலையங்களின் அறிவித்தல் நடவடிக்கைகளில் இருமொழிக் கொள்கை அமுல்படுத்தப்படல் தொடர்பாக அவதானிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 235 அறிவிப்புக்கள் இரு மொழிகளில் மேற்கொள்ளப்படுவதுடன் 636 அறிவிப்புக்கள் இரு மொழிகளில் மேற்கொள்ளப்படுவதில்லை என்பது தெளிவாகியது. இதற்கு மேலதிகமாக ஊவா மாகாணத்தில் அவதானிக்கப்பட்ட புகையிரத நிலையங்களில் இரு மொழிக் கொள்கை அமுல்படுத்தப்படாமையானது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

மேற்போந்த எண்ணிக்கைகளை சதவீதமாக நோக்கும் போது மத்திய, கிழக்கு மற்றும் வடக்கு ஆகிய மாகாணங்களில் முறையே 50%, 71% மற்றும் 78% பெறுமதிகள் என இனங் காணப்பட்டது.

ஏனைய அனைத்து மாகாணங்களிலும் 50% இற்கும் குறைவான சதவீதமாக இரு மொழிக்கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட

போதும் ஊவா மாகாணத்தில் இரு மொழிக் கொள்கை அமுல்படுத்தப்படாமையானது முக்கிய ஒரு விடயமாகும். இதற்கு அமைவாக நாடளாவிய ரீதியிலான புகையிரத நிலைய அறிவிப்புக்களின் போது இரு மொழிக் கொள்கை அமுல்படுத்தப்படுதலின் சதவீதமாக பின்வருமாறு எடுத்துக் காட்டலாம்.

இதற்கு மேலதிகமாக நாடு பூராகவுள்ள புகையிரத நிலையங்களில் பொதுவான அறிவிப்புப் பணிகள் இரண்டு மொழிகளில் மேற்கொள்ளப்படும் விதத்தினை சதவீதமாகக் கருத்திற்கொள்கின்ற போது 11% மிகக் குறைந்தளவில் இரு மொழிகளில் மேற்கொள்ளப்படுவதுடன் சுமார் 89% பொதுவான அறிவிப்புப் பணிகள் தற்போது கூட ஒரு மொழியிலேயே (சிங்களம்)



மேற்கொள்ளப்படுகிறது.

விசேட அறிவிப்புப் பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது நாடுபூராகவுள்ள புகையிரத நிலையங்களில் 1% வீதமாக மிகக் குறைந்தளவில் இருமொழிகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் மிகுதி 99% அறிவிப்புப் பணிகள் இன்னமும் ஒரு மொழியில்

(சிங்களம்) மேற்கொள்ளப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது.

புகையிரத போக்குவரத்தின் போதான அறிவிப்புப் பணிகளின் போது அரச கரும மொழிக்கொள்கைக்கு ஏற்ப செயற்படுவதில் பாரிய குறைபாடு நிலவுவதை நம்மால் அவதானிக்க முடிந்தது. நாளாந்தம் பெரும்பாலானோர் புகையிரதப் போக்குவரத்தில் ஈடுபடுவதுடன் இந் நிலைமை மேலும் தொடருமாயின் இலங்கைப் பிரஜைகளின் மொழி உரிமைகள் மீறப்படுவது மாத்திரமன்றி புகையிரதப் போக்குவரத்தினுள் அவர்கள் பாரிய அசௌகரியங்களைச் சந்திக்க நேரிடும் என்பதும் குறிப்பிடப்படல் வேண்டும்.

இதற்கமைய பொதுப் போக்குவரத்து சேவையில் பிரஜைகளின் மொழி உரிமை மீறப்படல் தொடர்பாக எம்மால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவிலும் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுக்கு பதில் குறியாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் இணக்கம் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகையில் ஓரளவு அனுகூலமான பண்புகள் காணப்பட்ட போதும் பிரதிகூலமான பண்புகளும் அங்கு காணப்படுவதனை குறிப்பிடுதல் வேண்டும். அதற்கமைய அக் குறைபாடுகளைப் பூர்த்திசெய்து பிரஜைகள் வசமுள்ள மொழி உரிமைகளைப் பாதுகாத்து தமது அன்றாட வாழ்க்கையை வெற்றிகரமாகக் கழிப்பதற்கு அதிகாரிகளின் பொறுப்புக்கள் ஒரு கடமை எனக் கருதப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென்பது மிகத் தெளிவான ஒரு விடயமாகும்.

pix by suresh prasanna fernando

மொழி உரிமைகளுக்கான ஒன்றிணைவு, ஒரு செயற்பாட்டாளரின் பார்வையில்

கடந்த சில ஆண்டுகளுக்குள் மொழி உரிமை தொடர்பாக இலங்கை பல வெற்றிகளைச் சாதித்துள்ளது. இவ் அனைத்து வெற்றிகளும் இலகுவாகப் பெற்றுக்கொள்ளப்பட்டவை அல்ல. அவை அனைத்தும் பல்வேறு இன்னல்கள் மற்றும் சவால்கள் என்பவற்றுக்கு மத்தியில் பயணித்த நீண்டதொரு பிரயாணத்தின் பிரதிபலன் ஆகும். அந்நீண்ட பிரயாணத்தில் இணைந்திருந்த துறைசார் செயற்பாட்டாளர் ஒருவரது இதுவரை பயணித்த பாதை பற்றி சற்று மீட்டிப் பார்க்கும் ஒரு சுருக்கமான மீளாய்வு பின்வருமாறு காட்டப்படுகிறது.

குடிமகனின் மனித உரிமைகள் விடயத்தில் நீண்ட காலமாக செயற்படும் ஒரு நிறுவனமாக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சிறுபான்மைச் சமூகத்தின் மொழி உரிமையை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஒரு படிமுறையாக பங்காளி இயக்கங்களின் வழிநடத்தலின் கீழ் கிராமிய மட்ட சிவில் செயற்பாட்டாளர்களின் பங்கேற்புடன் நாடுபூராவும் 15 மாவட்டங்களில் 449 மொழிச் சங்கங்கள் தாபிக்கப்பட்டன. அதற்கமைய அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, நுவரெலியா, மாத்தளை, பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை கிளிநொச்சி, குருநாகல் மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் மொழிச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் அடிமட்டத்திலுள்ள மக்கள் எதிர்நோக்கும் அடிப்படை மொழிப் பிரச்சினைகளை இனங்காண்பதே இந் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நோக்கமாகக் காணப்பட்டது. இனங்காணப்படும் மொழிப் பிரச்சினைகளை மக்களது தலையீட்டின் மூலம் தீர்த்து வைப்பதற்கான ஒரு பொறிமுறையினைத் தயாரித்தல் அதற்கு அடுத்த நோக்கமாக காணப்பட்டது.

வடக்கு கிழக்குப் பிரதேசங்களை அண்டியதாக ஆரம்ப கட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இரண்டாம் கட்டத்தில் மத்திய மாகாணத்திலும் மூன்றாம் கட்டத்தில் வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அதன் போது நாம் பாரிய சவால்களை எதிர்கொள்ள நேர்ந்ததுடன் அவை பல்வேறு வடிவங்களில் உருவெடுத்தன. அவற்றுள் அப்போதிருந்த அரசாங்கத்தின் தலையீடு முதன்மையாகக் காணப்பட்டது.

யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் சிறுபான்மை சமூகத்தின் மொழி உரிமைக்காக மீண்டும் குரல் எழுப்புதலானது அப்போதிருந்த அரசாங்கத்தின் நகைப்புக்குப் பாத்திரமான ஒரு விடயமாகக் காணப்பட்டது. அதன் காரணமாக அவர்கள் இவ் வேலைத்திட்டத்திற்கு அடிக்கடி தடைகளை விதித்தார்கள்.

அவ்வாறே மேலோட்டமாகப் பார்க்குமிடத்து மக்களது பார்வையில் இது மக்களுக்கு நேரடியான நன்மைகளை பெற்றுத் தராத ஒரு இடமாக (பொருள் மற்றும் நிதிசார் உதவிகள் போன்றன) காணப்பட்டதன் காரணமாகவும் மொழிச் சங்க எண்ணக்கருவினை பொதுமக்கள் மத்தியில் கொண்டு செல்லலானது கடினமான ஒரு விடயமாக இருந்தது. அதன்பொருட்டு மனோபாவ மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு நேர்ந்தது. இக் காலகட்டத்தில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் மொழிச் சங்கங்கள் பற்றிய ஆரம்ப கட்ட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. அரச சார்பற்ற நிறுவனமாக நாம் இப் பணியில் ஈடுபடுவதானது சிலருக்கு பிரச்சினையாகத் தோன்றியதுடன் குறித்த அமைச்சின் பல்வேறு உத்தியோகத்தர்கள் அதற்கு இடையூறு விளைவித்தனர்.

கிராமத்தில் உள்ளவரும் பிரஜைகளுக்குப் பொறுப்புக்

ஜே. சுரேஷ் குமார்
கள இணைப்பாளர்

கூறுபவருமான அரச உத்தியோகத்தர்களதும் (கிராம அலுவலர் போன்ற) கிராமத்தில் வசிக்கும் ஒருசில இனவாதக் குழுக்களினதும் எதிர்ப்பும் மொழிச்சங்கங்களை நடாத்துவதற்கு எதிராக எழுந்ததுடன் குறித்த விடயம் காரணமாக ஆரம்ப கட்டத்தில் மொழிச் சங்கங்களை ஏற்படுத்துதலானது ஓரளவு கடினமான பணியாக காணப்பட்டது.

இறுதியில் இவ் அனைத்து தடைகளையும் வெற்றி கொண்டு நாடு பூராகவும் பல்வேறு பிரதேசங்களில் மொழிச் சங்கங்களை தாபிப்பதற்கு முடிந்தமையானது நாம் பெற்றுக்கொண்ட பாரியதொரு வெற்றியாகும்.

மொழிச் சங்கங்களினூடே எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான வேலைத்திட்டமொன்றை தயாரிக்கையில் அடிப்படை விடயமாக மொழி தொடர்பாக அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டரீதியான விடயம் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் தேவைப்பாடு காணப்பட்டது. அதன்பொருட்டு சட்டத்தரணி திரு.எஸ். ஜீ. புஞ்சிஹேவா அவர்களின் "மொழியும் மனிதாபிமானமும்", கலாநிதி தேவநேசன் நேசையா அவர்களின் "இலங்கையில் தமிழ் மொழி உரிமைகள்", திரு. லயனல் குருகே அவர்களின் "பிரஜைகளின் உடன்பாடு" மற்றும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் எழுதப்பட்ட "அரச கரும மொழிக்கொள்கையும் அது தொடர்பான சட்டங்களும்" ஆகிய நூல்களும் இது தொடர்பாக எழுதப்பட்ட ஏனைய ஆவணங்களும் இதன்போது பெரிதும் உறுதுணையாக இருந்ததென்பது கட்டாயம் குறிப்பிடப்படல் வேண்டும்.

பல்வேறு படிமுறைகளினூடாக மக்களுக்கு அறிவூட்டப்பட்டதுடன் அரச நிறுவன உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள். சமாதான நீதவான்கள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மதத் தலைவர்கள் போன்ற பல்வேறு சமூக மட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களுக்கு இங்கு விழிப்புணர்வூட்டப்பட்டது. அதற்கமைய அடிமட்டத்திலுள்ள மக்களுக்கும் உத்தியோகத்தர்களுக்குமிடையே மொழி தொடர்பில் ஓரளவு தொடர்பினைக் கட்டியெழுப்புவதற்கு முடிந்தது. அதன்போது தனிப்பட்ட ரீதியாகவும் சமூக ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த மொழியினை அடிப்படையாகக் கொண்டு மேலெழுந்த பல பிரச்சினைகளை இனங்காணக் கூடியாயிருந்தது. அவ்வாறான சில பிரச்சினைகளை சுருக்கமாக இனங்காணல் பொருத்தமாகும்.

- ஒரு மொழியில் அரச நிறுவனங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் தொடர்பாடலில் ஏற்படும் குறைபாடு காரணமாக மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்ளலும் அநீதி இழைக்கப்படலும்.
- சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மொழி கற்பிப்பதும். தமிழ் பாடசாலைகளில் சிங்கள மொழி கற்பித்தலும் உரிய முறையில் இடம்பெறாமை காரணமாக மாணவர்கள் தமது சகோதர மொழியிலிருந்து தூரமாதல் மற்றும் அதனூடாக மொழிப் பிரச்சினை நீண்டு செல்லல்.
- வைத்தியசாலைகளில் இருமொழி வேலைத்திட்டமொன்று இல்லாமை காரணமாக வைத்தியர்களும் நோயாளர்களும் அசௌகரியங்களுக்கு ஆளாகுதல்.

இவ்வாறான பல்வேறு பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது பற்றிய ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தி தமது மொழி உரிமைக்காகத் தோற்றுவதற்கு பிரஜைகளைத் தூண்டுதல் மேற்கொள்ளப்பட்டது. இந் நிலைமையின் கீழ் மீறப்பட்ட மொழி உரிமைகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு சட்டத்தின் துணை நாடப்பட்டதுடன் உயர் நீதிமன்றம், மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அரசகரும மொழிகள் ஆணைக்குழு ஆகிய நிறுவனங்களில் முறைப்பாடுகளைச் சமர்ப்பித்து அவற்றுக்குச் சாதகமாக தீர்வுகள் எட்டப்பட்டன. இலங்கை பிரஜைகளின் சகலவிதமான மொழி உரிமைகள் மீறப்படுகின்ற போது அதற்குத் தீர்வு காண்பதற்காக அழைக்க முடியுமான 1956 எனும் தொலைபேசி இலக்கத்துடன் கூடிய பெயர்ப்பலகைகள் இலங்கை பூராகவும் காட்சிப்படுத்தும் பணி கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

தேசிய அடையாள அட்டை, பண நோட்டுக்கள், மருந்துப் பொதிகள் மற்றும் நுகர்வுப் பண்டப் பொதிகள் ஆகியவற்றில் இரு மொழிகளில் குறிப்பிடப்படல், வங்கி நடவடிக்கைகள் மற்றும் அரச நிறுவனங்களின் நடவடிக்கைகள் ஆகியன இருமொழிகளில் மேற்கொள்ளப்படும் ஒரு நிலைமையினை ஏற்படுத்தல் என்பன நாம் அடைந்து கொண்ட வெற்றிகள் ஆகும்.

அத்தோடு நின்றுவிடாமல் மொழி உரிமைகளை மேம்படுத்துவதற்காக கலாசார நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

pix by suresh prasanna fernando

சிங்கள மற்றும் தமிழ் மொழிச் சங்கங்களுக்கிடையிலான பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் இதன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் சிங்கள மொழிச் சங்க உறுப்பினர்கள் தமிழ் கிராமங்களுக்கும், தமிழ் மொழிச் சங்க உறுப்பினர்கள் சிங்களக் கிராமங்களுக்கும் உறவுப் பயணம் மேற்கொண்டதுடன், அவரவர்களது கலாசார பல்வகைமைகளைப் பகிர்ந்து கொண்டனர். அவ்வாறே சிங்கள மற்றும் தமிழ் பாடசாலை மாணவர்களைப் பங்கேற்கச் செய்து இலங்கையில் முதல் தடவையாக சிங்கள தமிழ் மாணவர் கலைவிழா ஒன்றை ஏற்பாடு செய்து அதனை வெற்றிகரமாக பூர்த்தி செய்ய முடிந்தமையானது பிரமொழிகளுக்கு மதிப்பளிக்கும் மானுட சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான ஆரம்ப படிமுறையின் பாரிய வெற்றியாகும்.

அவ்வாறே மொழி உரிமை மீறப்படல் தொடர்பான திட்டவட்டமான தகவல்களை அறிந்துகொள்ளத் தேவைப்பட்டதுடன் அதன் பொருட்டு பல மொழிக் கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. அதன் போது போக்குவரத்து, மருந்து, அரச மற்றம் தனியார் நிறுவனங்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலைகள் ஆகிய துறைகளினூடாக அம் மொழிக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

நாட்டு மக்களை செயல் ரீதியான பங்கேற்கச் செய்வதனூடாக மொழி தொடர்பான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற போது சமூகத்தில் மறைந்திருந்த ஏனைய பல்வேறு வகையான மானுடப் பிரச்சினைகளை இனங்காண முடிந்தது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீளக் குடியமர்த்துதல் தொடர்பான பிரச்சினைகள், வீட்டுப் பிரச்சினைகள், காணிப் பிரச்சினைகள், கிராமத்து மக்களைச் சுரண்டுதல், பயிர்ச்செய்கை தொடர்பான பிரச்சினைகள், சுற்றாடல் பிரச்சினைகள், கல்வி மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் ஏனைய பல்வேறு பிரச்சினைகளை இனங் காண்பதற்கு இச் செயன்முறையினூடாக சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றது. ஆயினும் அவற்றுக்கு மொழிச் சங்கங்களினூடாகத் தீர்வு வழங்குவது இயலாத ஒரு காரியமாக விளங்கியது.

அன்றாட மனித வாழ்வில் ஆதிக்கம் செலுத்துகின்ற இவ்வாறான பல பிரச்சினைகளை இனங்காணும் போது அவற்றை விட்டு விலகி மொழிப் பிரச்சினை தொடர்பாக மாத்திரம் கலந்துரையாடி மொழிச் சங்கங்களை மேற்கொண்டு செயற்படுத்துதல் கடினமானது என்ற காரணத்தால் மேற்படி பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கி மொழிப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கக்கூடிய ஒரு கட்டமைப்பினைக் கட்டியெழுப்பும் தேவை எழுந்தது.

அதன் படி பிரஜைகள் சபை எண்ணக்கரு இதன்பொருட்டு ஒன்று சேர்க்கப்பட்டதுடன் பல்வேறு பங்காளி அமைப்புக்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோரின் கருத்துக்கள் சகிதம் இதன் சட்டப் பின்னணியை விளங்கி அறிவியல் ரீதியான முறையினூடாக இதனை கிராமத்துக்குக் கொண்டுசெல்லல் பிரதான நோக்கமாக விளங்கியது. இதன் பொருட்டு கிராமத்தின் செயற்பாடுகளில் செயல்ரீதியாக ஈடுபடும் நபர்கள் மற்றும் அமைப்புக்கள் என்பன இதில் பங்காளிகளாக இணைக்கப்பட்டதுடன் அதனூடாக பிரசைகள் சபை எண்ணக்கருவினை கிராமத்தில் கட்டியெழுப்ப முடிந்தது.

பின்னர் மொழிச் சங்கங்களினூடாக இவ் எண்ணக்கரு அமுல்படுத்தப்பட்டதுடன் தற்போது இலங்கை பூராவும் சுமார் 420 பிரஜைகள் சபைகளை நடைமுறைப்படுத்தக் கூடியதாயுள்ளது. அதற்கமைய கிராம மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு கிராமத்திலிருந்தே உரிய முறையில் தீர்வு வழங்கக்கூடிய பலம் வாய்ந்ததொரு பொறிமுறை உருவாகியது. பிரஜைகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பிரஜைகளுக்காக புதிய சட்டங்கள், சமவாயங்கள் என்பவற்றை வகுத்தலும் பிரஜைகள் சபைகளை மேலும் வலுவடையச் செய்து செயல்ரீதியான நிறுவனமாக கிராமத்தில் இயங்குவதற்கு வழியமைத்தலும் எமது எதிர்கால நோக்கமாகவுள்ளது.



பூவுலகின் அனற்பொறி .... தீப்பற்றாத மலர்க்கொத்து !

திம்பிரியாகம பண்டார

தளதா மாளிகைக்கு முன்பாகவுள்ள வீதி இன்னமும் மூடப்பட்டுக் காணப்படுகிறது. கண்டி வாவியின் பச்சை நிறம் இன்னமும் மாறவில்லை. காலைப் பொழுதில் கண்டி மாநகரின் மர உச்சிகளையும் கொங்கிரீட் கோபுரங்களையும் ஒன்றிணைந்து குளிர் காற்றானது பனிமூட்டத்தை விரித்துள்ளது. நாம் இளைஞர் பௌத்த சங்கத்தின் அரங்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். அதன் நுழை வாயிலுக்கு அருகே ஒரே கலகலப்பு மத்திய மாகாணத்தின் நாளா பக்கங்களிலுமிருந்து வருகை தந்திருந்த மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் அரங்கில் அமர்ந்திருந்தனர். மாணவர்கள் வரைந்த ஓவியங்களை சுவர்களில் ஒட்டும் பணிகளில் ஈடுபட்டுள்ள லஹிரு, துமிந்து, பிரதீபன் மற்றும் சுரேஷ் ஆகியோர் அம் மாணவர்களின் இதயங்களில் நீங்காத இடம் பிடித்துள்ளனர்.

அரங்கினுள் நுழையும் மாணவ மாணவிகள் பதிவு செய்யப்படும் வேளையில் அவர்களது கரங்களில் ஒப்படைக்கப்படும் புத்தகக் கட்டினுள் முக்கியமான ஒரு புத்தகம் உள்ளது. "மொழியும் மனித நேயமும்" என்பதே அந் நூலின் பெயராகும். அதனை எழுதியவர் அறிவாழம் படைத்த கவிஞரும் கல்விமானுமான எஸ்.ஜீ. புஞ்சிஹேவா ஆவார்.

"எமது மொழி எமது தாய் போன்றதாகும். அவ்வளவு தூரம் அன்பு செலுத்தப்பட வேண்டும் என்பதாலேயே. நாம் பெற்ற அனைத்தும் மொழியினை அடிப்படையாகக் கொண்டது என்பதால் எமக்கு கிடைக்க வேண்டிய அனைத்தையும் பற்றிச் சொல்வது அம் மொழியின் மூலமே. இருக்கையில் அமர்ந்த மாத்திரத்தில் நூல்களின் பக்கங்கள் மீது தனது பார்வையைச் செலுத்தும் மாணவ மாணவியரின் இதயத்தைத் தொடரும் அவ்வமைதி வாய்ந்த மொழியானது அவர்களது மதிநுட்பத்தினைக் கட்டியெழுப்பும். அது சிங்கள மொழியாக இருக்கலாம். தமிழ் மொழியாக இருக்கலாம். தமது தாய் மொழி தாய்ப்பாலைப் போன்று பெறுமதி மிக்கதென எஸ். ஜீ. மிகத் துள்ளியமாக உணர்த்துகிறார்.

மேடையில் உள்ள பாரிய அறிவிப்புப் பதாகையில் பின்வரும் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. "மொழியும் மனிதாபிமானமும் – சிங்கள தமிழ் கலைவிழா" முன் எப்போதும் இருந்திராத ஒரு அழைப்பே அங்கு காணப்படுகிறது. சிங்கள பௌத்த, தமிழ், ஹிந்து, இஸ்லாம் ஆகிய கலாசாரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவ மாணவிகள் ஒரே கூரையின் கீழ் ஒன்றாக அமர்ந்து உரைநடை வசனம் பேசிப் பழகி இசை நயத்துடன் மகிழ்ச்சி பொங்கும் உள்ளங்களுடன் சுதந்திரமாக உலாவ வருகின்றனர்.

சிங்கள, தமிழ் மாணவர் இலக்கிய கலை விழா என்பது ஓராண்டு காலமாக மெல்ல மெல்ல ஏற்பாடு செய்யப்பட்டு அதன் இறுதிக் கட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட பல்வேறு வர்ணங்கள் அடங்கிய மலர் தட்டு போன்ற ஒன்றாகும். பர்தா, நெத்திப் பொட்டு, வெள்ளைச் சட்டை மற்றும் வெள்ளைக் காற்சட்டை என்பன ஒரே ஓவியத்தில் பல்வேறு வர்ணங்கள் தீட்டியதைப் போன்றதாகும். மத்திய மற்றும் ஊவா மாகாணங்களை மையமாகக் கொண்ட இக் கலை விழாவின் முதற்படி எடுத்து வைக்கப்பட்டது. அதற்கமைய 2015 பெப்ரவரி 14 ஆம் திகதி கண்டியிலும் பெப்ரவரி 15 ஆம் திகதி பதுளையிலும் கலைவிழாவை நடாத்துவதற்கு ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்தனர்.

இவ் இரண்டு மாகாணங்களுக்கும் சொந்தமாக மாணவர்கள் அவர்களது பாடசாலைகளுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டதன் பின்னர் அழைக்கப்பட்ட சித்திரம், கவிதை, கட்டுரை மற்றும் சிறுகதை ஆகியவற்றுள் சிறந்த படைப்புக்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் என்பவற்றை வழங்குவதற்கும் அனைத்து விடயத்துறைகளும் உள்ளடங்கும் வகையில் செயலமர்வுகளை நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டது. எஸ். ஜீ. புஞ்சிஹேவா, சிசிரகுமார மஹகம, அனுரசிரி ஹெட்டிகே, நிஷ்ஷங்க விஜேமான்ன, பண்டார ஹேரத், எம்.எப். எம். ரிபாட், கந்தையா கணேஷமூர்த்தி, சாந்தி குமார், த. மனோகரன் மற்றும் ம.ம. ஜெயசீலன் ஆகிய கல்விமான்கள் மற்றும் இலக்கியவாதிகள் ஆகியோர் படைப்புக்களின் நடுவர்களாக அல்லது செயலமர்வினை வழிநடத்துதலின் மூலம் பங்களிப்புச் செய்தனர். சிங்களக் கவிதை நடுவராகவும் செயலமர்விற்குப் பொறுப்பாகவும் இக் கட்டுரையாளரே பணி புரிந்தார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவ மாணவிகளின் ஆக்கங்கள் பற்றி தமிழ் அறிஞர்களது மீளாய்விற்கு இடமளித்து இக்கட்டுரையாளரின் பார்வையில் இவ் இடத்திலிருந்தான அவதானிப்புக்களும் உணர்வுகளும் எழுத்துருவில் வடிக்கப்படுகின்றன.

நாம் ஒரு கனவு கண்டோம். பல ஆண்டு காலமாக அக் கனவினை நனவாக்குவதற்கு முயற்சி மேற்கொண்டோம். ஆயினும் போதியளவு தமிழ் மாணவர் ஆக்கங்களை தருவித்துக்கொள்ள இயலாது போனதன் காரணமாக அக்கனவு நனவாகவில்லை. மகரந்த இலக்கிய நிகழ்ச்சியின் கீழ் சிங்கள, தமிழ் இலக்கிய விழா நடாத்தப்பட்டமையே பலனற்றுப் போன அக் கனவாகும்.

பல்வேறு சிவில் அமைப்புக்களின் பலம்மிக்க ஒழுங்கமைப்பின் பயனாகவே இம் முறை அது சாத்தியமாயிற்று பதுளை – "ஊவ சக்தி மன்றம்" மற்றும் கண்டி – "சமாதானம்" எனும் அமைப்புக்களுடன் தொடர்பான மொழிச் சங்கங்களின் செயற்பாடும் பலம் பொருந்திய ஒழுங்கமைப்பும் இதற்குப் பெரிதும் துணை புரிந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நிகழ்ச்சித் திட்டத்தின் வழிகாட்டியாக செயற்பட்டது.

மலைச்சாரல் கானகத்திலிருந்து உதிக்கும் போதுபனிக்குமிழ்கள் நீல நிற நட்சத்திரங்களிடையே மின்னுகின்றன. அழகிய ஆயினும் மலர்களின் இனிமையிலே கொணர்ந்த நறுமணம் தேவலோகத்தில் பரவுகிறது.

வலள ஏ. ரத்நாயக்க கல்லூரியின் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவியான ஹஷினி சத்துரிக்கா எழுதிய "அழகுறும் கானகம்" கவிதை வரிகளிலிருந்து மேற்குறித்த கவிதை மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. கவிதைச் செயலமர்வின் போது எமது கவனத்தை ஈர்த்த அக்கவிதையின் நயமும் தோற்றமும் அனைவரதும் மனதைக் கவர்ந்தது. "பசுமை நிறத் தோற்றம் பெற்ற கிளிகள் மரத்தினிலே என்ற அடிகளைக் கொண்ட கவிதைகள் எழுதப்பட்டிருந்தன.

பரணகம மத்திய மகா வித்தியாலயத்தின் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவியான தில்மி இமல்கா எழுதிய வாழ்க்கைக்கு ஒரு படி எனும் படைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த கவிதையே இதுவாகும்.

**"வாழ்க்கையின் புது வடிவம்
காற்றைப் போன்று மிதந்து செல்லும்
தீயைப் போன்று சாம்பலாகிச் செல்லும்
புகையினைப் போன்று மறைந்து செல்லும்"**

இதுவொரு புதுமையான கற்பனையாகும்.

பரணகம வித்தியாலயத்தின் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவியான மாதவியின் "தொடுவானத்தின் அந்தத்திலிருந்து" எனும் கவிதையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**"கடற்கரைக்கு
சமுத்திரம் இன்றிய
வாழ்க்கையொன்று இல்லை"**

என்பதைப் போன்றே !

இங்கு ஆசிரியைக்கும் மாணவிக்கும் இடையிலான நெருக்கம் குறிப்பிடப்படுகிறது.

இளங் கவிதை விதைகளிலிருந்து மெதுவாக வித்துக்கள் மேலெழுந்து ஓரிரு இலைகளாக வளர்ந்து பாரிய விருட்சகமாகத் தானாக வளரும் வரை காத்திருக்காமல் தண்ணீர் மற்றும் உரம் என்பவற்றை இட்டுப் பாதுகாப்பது நம் எதிரே உள்ள ஒரு தேசிய கடமையல்லவோ?

நான் சிங்களக் கவிதை செயலமர்வுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டமையின் காரணமாக எனது பார்வை சிங்களக் கவிதைகளை நோக்கிச் சாய்ந்தமை பற்றி ஏனைய இலக்கியவாதிகள் மன்னிக்க வேண்டும்.

மத்திய மாகாண இலக்கிய கலைவிழாவானது சிங்களம், தமிழ், இஸ்லாம் ஆகிய கலாசாரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய மாணவ மாணவிகளின் கண்கவர் நடனங்களுடன் நிறைவு பெற்றது. விருது வழங்கும் நிகழ்வின் பின்னர் விடைபெறும் வேளை வந்தது. மகிழ்ச்சி பொங்கும் முகங்களுடன் மாணவர்களை வரிசையாக நிறுத்தி பாதையில் நுழையும் ஆசிரியைகளின் காட்சியானது பார்ப்பதற்கு இனிமையாக இருந்தது.

குளிரான பனிமூட்டம் ஓய்ந்து கடும் வெப்பத்தினால் சூடான காற்று மாலையாகும் போது சூடு தணியத் துவங்குகிறது. பூமி வெப்பமடைந்துள்ளது. ஆயினும் அதன் மேல் பூத்த வர்ணங்கள் நிறைந்த பூக்கள் மிருதுவானதாகும். அழகானதாகும். தீப்பற்றி எறியவில்லை.

மற்றுமொரு தினத்தில் வைகரைப்பொழுது உதயமாகிறது. பதுளை பொதுமக்கள் நூல் நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள மைதானத்திலிருந்து பார்க்கும்போது பாரிய மலைத்தொடர் காட்சி தருகிறது. கண்டியை விடவும் இங்கு வீசும் குளிர்காற்று சற்றுப் பலமானதாகும்.

விசாலமான நமுனுகுல தொடர் மலை உச்சியில் வானளாவ பளபளக்கிறது.

இக் காட்சியை எமது விழிகள் பார்த்து இரசித்தன. சுதத் காமினி பண்டார மற்றும் நிஷ்ஷங்க விஜேமான்ன ஆகிய உற்ற இலக்கிய நண்பர்களுடன் இனிய காலைப் பொழுதில் அளவளாவக் கிடைத்தமையானது நீண்ட நாட்களுக்குப் பின்னர் நாம் பெற்ற பாக்கியமாகும். குத்து விளக்கு ஏற்றி வைப்பதற்கு வருகை தந்த இஸ்லாமிய ஆரம்ப பாடசாலையொன்றின் உடை அலங்காரம் எம்மைக் கவர்ந்தது. இஸ்லாம் முன்பள்ளிச் சிறார்களின் நடன நிகழ்ச்சியின் முடிவில் ஒருவருக்குப் பின் ஒருவர் மேடையை விட்டு கீழிறங்கும் வேளையில் சிறுவர்கள் இருவர் தான் செல்லும் திசையறியாது திரையின் பின்னால் தட்டுத் தடுமாறிய போது முன்பள்ளி ஆசிரியை சிறுவர்களை அழைத்து வருவது தெரிந்தது.

"ஏதேனும் ஓர் மக்கள் கலாசாரத்தின் கலாசார விழுமியங்களைப் புறந்தள்ளி மொழி உரிமைகளை வழங்கும் செயன்முறையினை பூர்த்தி செய்ய முடியாது என்ற யதார்த்தத்தினை புரிந்துகொண்டமையினாலேயே நாம் இதில் ஊடாட்டம் செய்தோம் !

நடேஷன் சுரேஷ் கூறுகிறார். அதுவே ஊவா சக்தி மன்றத்தின் தொலை நோக்காகும். சுமித் அபேகோனின் (திஸ்ஸ) உயிரோட்டமுள்ள பலமே ஊவா கலை விழாவின் சக்தியாகும்.

"இவ்வாறான சந்தர்ப்பங்கள் தோட்ட மாணவர்களுக்கு மிகவும் அரிதாகவே கிடைக்கிறது. இளமைப்பருவத்தை அடைவதற்கு முன்னரே வாழ்க்கைப் போராட்டத்தில் நுழைவதற்கு நேர்ந்துள்ளமையானது கவலைக்கிடமான ஒரு விடயமாகும். அவர்களது கவிதைகளில் இந் நிலைமை நிரூபணமாகியுள்ளதென நினைக்கிறேன் என கந்தையா கணேஷமூர்த்தி எனும் கவிஞர் குறிப்பிடுகிறார்.

அவர் 2013 ல் சார்க் இலக்கிய மாநாட்டினைப் பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கைத் தமிழ் கவிஞராவார்.

சூரிய கிரணங்களால்
வெப்பமடைந்த பூமி
இறுதி நீர்த்துளி வற்றிப் போய்விட்டது
சிதறிப் போன வரண்ட பூமியின்
கிளைகளைப் போல
கைகளை விரித்து"

சூழலின் கோரத் தன்மையை மனக்காட்சி மூலம் கவிதையாக வடிந்த மஹியங்கனை ஒருபெந்திவெவ வித்தியாலயத்தில் உயர்தரக் கலைப் பிரிவு மாணவி ஹசினி பிரியமன்தினியை நான் ஊவா மாகாண சிங்களக் கவிதை செயலமர்வின் போது சந்தித்தேன்.

ஒரே காம்பில் பூத்த இருமலர்கள் போன்ற தாருனிகா லக்ஷானி எனும் மாணவி "நீர்" என எழுதியிருந்த கவிதைக்கு கருப்பொருளாக அமைந்தது ஒரு தாயின் இழப்பாகும்.

இவை அக் கவிதையிலிருந்து எடுக்கப்பட்ட சில வரிகளாகும்.

மல்லிகைப் பூ வாசம்
நிலா ஒளியினை முத்தமிட
அல்லிப்பூ மெல்ல மெல்ல

ஓர் எழுத்தாளர் தன் ஆற்றலை எவ்வாறு விருத்தி செய்வது என்பது பற்றி கவிதைச் செயலமர்வின் போது மாணவர்கள் சமர்ப்பித்த பிரச்சினைகளின் அடிப்படையிலேயே கலந்துரையாடல் இடம்பெற்றது.

"ஐந்தாம் வகுப்பு வரை மாத்திரம் கல்வி கற்ற இலங்கையின் மாபெரும் எழுத்தாளரான மார்டின் விக்கிரமசிங்க எவ்வாறு மாபெரும் இலக்கியவாதியாகவும் மாபெரும் கல்விமானாகவும் திகழ்ந்தார்.

என்னால் வினவப்பட்ட கேள்வியின் பின்பு மாணவர் அரங்கில் அமைதி நிலவியது. நான் அவர்களது கண்களை நோட்டமிட்டடேன் உயரமான மாணவர்களிடையே இருந்த குள்ளமான ஒரு மாணவன் தனது கையை உயர்த்தினான்.

"பதில் என்ன?"

"சமூகத்தின் அனுபவங்களின் மூலம்" மாணவன் நேரடியாகவே பதிலளித்தான்.

"தம்பியின் பெயர் என்ன ?"

"விஹங்க"

"வகுப்பு"

"ஏழாம் வகுப்பு"

"விக்கிரமசிங்க அவர்களின் நூல்களை வாசித்துள்ளீர்களா ?"

"ஆம்"

"விருப்பமான புத்தகம்? "

"எமது ஊர் (அப்பே கம)"

விஹங்க ஒரு சிறுவனாவான். அவனது கண்கள் கூர்மையானவையாகும். நேரடியாக பதிலளிப்பான். எமது நாட்டிற்கு புதியதொரு சிந்தனை மற்றும் புதியதொரு தொலை நோக்கு தேவையாகவுள்ள ஒரு யுகத்தில் "விஹங்க" எனும் சிறுவனை நான் சந்தித்தமையானது என் மனதினுள் இருளில் உதயமான ஒளிக்கீற்று போன்றதாகும். இவ்வாறான இன்னும் எத்தனை மாணவர்கள் இருப்பார்களோ?

"சமூக அனுபவங்களின் மூலம் மாத்திரமா?"

நான் மீண்டும் மாணவர்களின் கண்களை நோட்டமிட்டேன்.

"புத்தகங்களை வாசிப்பதன் மூலம்"

நான் திருப்தியடைகிறேன்.

17 வயதைப் பூர்த்தி செய்யும் வேளை மார்டின் விக்கிரமசிங்கவின் அனைத்து சிங்களப் புத்தகங்களையும் வாசித்தமையினால் இலங்கை சமூகத்தைப் பற்றி எனக்குள் மகிழ்ச்சிமிக்க ஓர் உணர்வு ஏற்பட்டது. அம் மகிழ்ச்சியான உணர்வை இழந்த ஒரு சமூகத்தில் வாழ்க்கை நடாத்தும் எனக்குள் இன்றைய நிலைமை பற்றி ஓர் அதிருப்தியே காணப்படுகிறது. அதிருப்தியிலிருந்து திருப்தியை தேடிச் செல்லும் துன்பம் நிறைந்த கரடுமுரடான பாதையினிலே நெடுந்தொலைதூரத்தில் அமைந்துள்ள கிராமங்களின் சிறிய பாடசாலைகளின் கூரைக்குள் இவ்வாறான ஒளிக்கீற்றுக்களைச் சந்திக்க நேரிடும் வேளைகளில் இன்னும் கொஞ்ச காலம் உயிர் வாழ்வதற்கான ஆசை மனதினுள் மெதுவாக உயிர்பெற்று எழுகிறது.

இற்றைக்கு ஓராண்டு காலத்திற்கு முன்னர் எமது அன்பான ஒரு வாசகரான விமலரத்னவின் அழைப்பின் பேரில் கண்டி பரணகம வித்தியாலயத்தில் நடைபெற்ற இலக்கிய விழா ஒன்றில் நாம் பங்கேற்றோம்.

எனது நண்பனான அநுரசிறி ஹெட்டிகே அன்றைய தினம் மாணவர்களின் சிறுகதைகள் மற்றும் கட்டுரைகள் என்பவற்றை வெவ்வேறாக ஆராய்ந்து பயனுறுதியுடைய இடங்களைச் சுட்டிக் காட்டியதன் பிரதிபலனை மத்திய மாகாண

தமிழ் சிங்கள கலை விழாவின் போது காணக் கிடைத்தது.

பரணகம வித்தியாலயத்திலிருந்து கவிதைகள், சிறுகதைகள் பல முன்வைக்கப்பட்டிருந்தன. கலந்துகொண்ட மாணவர்களிடமிருந்தும் ஆசிரியர்களிடமிருந்தும் உற்சாக வரவேற்பு கிடைக்கப்பெற்றது.

அந்திப் பொழுதின் குளிரான பதுளையின் உணவகமொன்றில் நாம் அளவலாவும் வேளையில் எமக்கு " பரணகம வித்தியாலயம்" ஞாபகத்திற்கு வந்தது. இப் பாடசாலையின் பல பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு நிரந்தர வருமானம் கிடையாது. ஊதுபத்தி உற்பத்தி மற்றும் கூலி வேலை என்பன வாழ்வாதாரமாகும். மாணவர்களின் கவிதைகளில் அவ் அனுபவங்கள் மீள் உருவாகி இருந்தமையினை நாம் ஓராண்டு காலத்திற்கு முன்னரேயே கண்டுகொண்டோம்.

"பிரதிபலன் இல்லாமலும் இல்லை அல்லவா?"

நான் அனுரசிறி ஹெட்டிகேயிடம் வினவினேன்

கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்குச் செல்லும் பயணங்களின் போது படும் துன்பங்களை நாம் நன்கு அறிவோம்.

"ஆம் ! சற்று மகிழ்ச்சியாக உள்ளது.

அனுரசிறி கூறுகிறார். அந்த சந்தோஷம் அவரது கண்களில் தோன்றி கீழே விழாது கண்ணீர் துளிகளிரண்டு இருப்பதை நான் பார்த்தேன். உண்மையில் வாழ்க்கை இனிமையானது.

(ராவய செய்திப் பத்திரிகையிலிருந்து மறுபிரசுரம் செய்யப்படுகிறது)

மொழிச் சங்கங்கள் ஏற்படுத்திய மாற்றங்கள்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் மொழி உரிமைகள் தொடர்பான கருத்திட்டத்தின் குறிக்கோள் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதே. 2014 வரை ஒட்டுமொத்த நோக்கத்தை அடைந்துகொள்ளல் மற்றும் அதன் மூலம் இந்த நாட்டில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்த முடிந்தது. சிறுபான்மையினரின் மொழி உரிமைகளைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று 2011 ஜூலை மாதத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

விசேடமாக நாட்டின் சிறுபான்மையினர் கூடுதலாக வாழ்ந்த இப் பிராந்தியத்தில் சிறுபான்மையினர் எதிர்நோக்கும் மொழி ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஒரு நெருங்கிய காரணியான மொழிச்சங்கங்களை தாபிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதன் போது தமக்கே உரித்தான மொழியுடன் வாழ்வதற்கும், தமது பணிகளை மேற்கொள்வதற்கும் தமிழ் மக்களுக்கு" ஓர் உரிமை உண்டு என்பதைப் புரிந்துகொள்ளும் பொறிமுறையின் அடிமட்டப் பிரதிநிதித்துவச் செயற்பாட்டைப் பாதுகாப்பதே மொழிச் சங்கங்களின் பிரதான நோக்கமாக இருந்தது. அது மட்டுமன்றி மக்களுக்கு அறிவூட்டும் பிரதிநிதித்துவச் செயற்பாட்டைப் பாதுகாப்பதே மொழிச் சங்கங்களின் பிரதான நோக்கமாக இருந்தது. அது மட்டுமன்றி மக்களுக்கு அறிவூட்டும் பிரதிநிதி போன்றே மொழி உரிமைகள் மீறப்படல் தொடர்பாக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்துடன் தொடர்புபடுத்தல், மொழி உரிமைகள் மீறப்படல் தொடர்பான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மீது மக்களைத் தொடர்புபடுத்துதல் என்பன இங்கு முக்கியம் பெறுகின்றன. விசேடமாக மொழிச் சங்கங்களை நிறுவி அதன் மூலம் அரச அலுவலகத்தில் அல்லது தனியார் அலுவலகத்தில் எந்த ஒரு நபரும் தான் விரும்பும் (சிங்களம்/தமிழ்) இரண்டு மொழிகளில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதற்கான உரிமை தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு கட்டியெழுப்பப்பட்டதுடன் சிறுபான்மையினரின் மொழி உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அரசாங்கத்தின் நிர்வாகப் பொறிமுறையில் உள்ள நிறுவனங்களை ஊக்கப்படுத்துதல், அவற்றுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விரிவான அடிப்படையின் கீழான ஒரு வேலைத்திட்டத்தைக் கட்டியெழுப்புதல் இங்கு இடம்பெற்றது சிறுபான்மையினரின் மொழி உரிமைகள் தொடர்பாக அரசாங்க உத்தியோகத்தரிடையே அறிவினை விருத்தி செய்தல், பெயர்ப் பலகை, உத்தியோகபூர்வ பெயர்ப் பலகைகள், உத்தியோகபூர்வ ஆவணங்கள் என்பவற்றை இரு மொழிகளாக்குதல் மற்றும் நிறுவனங்களைப் பற்றிய விளக்க விவரணங்களில் நிலவும் குறைபாடுகளை அகற்றுதல் ஆகிய மாற்றங்களை ஏற்படுத்துவதே விசேடமான இவ் வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. குறித்த மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு வடக்கு கிழக்கிற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த மொழிச் சங்கங்கள் 2014 டிசம்பர் மாதமளவில் மொத்தம் 449 மொழிச் சங்கங்களை அம்பாறை, திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்பு, நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை, கிளிநொச்சி, களுத்துறை ஆகிய 15 மாவட்டங்களுக்கு விஸ்தரிப்பதற்கு எம்மால் முடிந்தது. இச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 8000 ஐ தாண்டுகிறது.

2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கையர்களின் மொழி உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு அது தொடர்பான பொறுப்புக் கூறும் அரச நிறுவனங்களான இலங்கை அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிடமும் இலங்கை மனித உரிமைகள்

சுதர்ஷனி குமாரி தமுனுபொல

ஆணைக்குழுவிடமும் சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு துறைகளைப் பிரதி நிதித்துவப்படுத்திய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டளவில் 400 ஐத் தாண்டியுள்ளது. மொழி உரிமைகள் மீறப்படல் தொடர்பான முறைப்பாடுகள் அது தொடர்பாக பொறுப்புக் கூறப்பட வேண்டிய சிறுபான்மையினர்கள் தமது தாய்மொழி தொடர்பில் சட்டரீதியான உரிமையைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் உண்டு என்பது பற்றி விளக்கமளிக்கும் வழக்குத் தீர்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் சிறுபான்மையினரின் மனோபாவ மாற்றத்தை ஏற்படுத்துவதானது இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட உண்மையான வெற்றியாகும். 2011 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட மொழி தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை 26 ஆக இருந்ததுடன் 2014 இல் அதன் எண்ணிக்கை 120 ஆக அறிவித்ததன் வாயிலாக மேற்போந்த விடயம் மிகவும் தெளிவாகிறது.

சிறுபான்மையினருக்கு மொழி உரிமைகள் பற்றி விளக்கமளித்தமையின் காரணமாக அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ளல் தவிர்ந்த அவ் அலுவலகங்களின் பெயர்ப் பலகைகளைப் இரு மொழிகளாக மாற்றுவதற்கு மொழிச் சங்கங்களின் தலையீட்டினால் சாத்தியமானது. விசேடமாக இம் மாற்றங்களுள் அரச நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெறும் கடிதங்கள் தான் அறிந்திராத ஒரு மொழியில் காணப்படல் முக்கியமான ஒரு விடயமாகும். அவ்வாறே அரச நிறுவனங்களில் தனது மொழியில் கதைக்கக் கூடிய ஒரு அலுவலர் காணப்படாமை. அரச நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களில் புகையிரதம், பஸ் வண்டிகளில் பெயர்ப்பலகைகள் ஒரு மொழியில் மாத்திரம் காணப்படல், வியாபாரப் பண்டங்களில் தேவையான விபரங்கள் ஆங்கிலத்தில் மாத்திரம் பொறிக்கப்படல், இலகு பரீட்சைகள், பொதுவான பரீட்சைகள், நேர்முகப் பரீட்சைகள் என்பன தொடர்பான அறிவித்தல்கள் தெரியாத பொழியில் அச்சிடப்படல், கிராம அலுவலர்கள் உள்ளிட்ட அரச அலுவலர்கள் பலர் தான் கடமை புரியும் அதிகாரப் பிரதேசங்களில் பேசப்படும் மொழியை அறியாதிருத்தல் போன்ற சிறுபான்மையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு இந் நிகழ்ச்சித்திட்டம் மூலம் முடிந்துள்ளது. உண்மையிலேயே அவை சிறுபான்மையினர் சமூகத்தின் உரிமைகள் தொடர்பாக காலடி எடுத்து வைக்கப்படும் ஒரு வெற்றிப்பாதையின் ஆரம்பமாகும் எனக் கருத முடியும்.

அதற்கமைய மொழிச் சங்கங்களின் தலையீட்டினால் அரச துறையாயினும் தனியார் துறையினாலும் பொது இடங்களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். உதாரணமாக, பன்சாலை, பள்ளி, கோயில் போன்ற பொது இடங்கள், பாடசாலை, பொலிஸ், வைத்தியசாலை போன்ற அரச நிறுவனங்கள், மலிகைக் கடைகள், தனியார் வங்கிகள் போன்ற தனியார் நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் என்பன மும்மொழிகளிலும் மாற்றம் செய்யப்படல் சிறுபான்மையினர் வழங்கிய தகவல்களுக்கு அமைய மொழிச் சங்கங்களின் தலையீட்டினால் நிறைவேற்ற முடிந்தது. அவ்வாறே அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களது உத்தியோகபூர்வ பெயர்ப்பலகைகள், மக்களுக்கு சேவையாற்றும் போது வழங்கப்படும் படிவங்கள், விவரப் படிவங்கள். என்பவற்றையும் இம் மொழிச் சங்கங்களின் வேண்டுகோளுக்கு அமைய இரண்டு மொழியாக அல்லது மும்மொழியாக மாற்றுவதற்கு முடிந்தது. இவ்வாறான சுமார் 1920 மாற்றங்கள் 2014 டிசம்பர் மாதமளவில் அரச நிறுவனங்களிலும் சுமார் 2550 மாற்றங்கள் பொது இடங்களிலும் சுமார் 3000 மாற்றங்கள் தனியார் துறையிலும் மேற்கொள்ள முடிந்தது. அப்போதிருந்த நிலைமையுடன் ஒப்பிடும் போது இந் நிலைமையானது உண்மையிலேயே சாதகமான ஒரு நிலையாகும்.

இதன் காரணமாக சிறுபான்மையினரின் மொழி உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வெற்றிகரமான பல நினைவுக் குறிப்புகளை தற்போது பதிய வைத்துள்ளமை தெளிவாகிறது.



இலங்கையின் முதலாவது சிங்கள தமிழ் மாணவர் கலை இலக்கிய விழா

கலை இலக்கிய ஈடுபாடானது மனிதனை நாகரிகமடையச் செய்வதற்கான ஒரு மார்க்கமாகக் கருதப்படுகிறது. அதற்கமைய இலக்கிய ஆய்வில் மிகவும் உன்னதமான ஒரு குறிக்கோள் காணப்படுகிறது. மனித நாகரிகம் பூராகவும் மனிதனின் நன்மைக்காக கட்டியெழுப்பப்பட்ட வளங்களை பகிர்ந்துகொள்ளும் சிந்தனைகளும் இதனோடிணைந்ததாக மேலெழுகின்றன. கலை இலக்கிய ஈடுபாடானது மனிதனை நல்லவனாக மாற்றுகிறது. கோப உணர்வுகளுடையவர்கள் கட்டுப்படுத்தப்பட்ட உணர்வுகளைக் கொண்டவர்களாக மாறுகின்றனர். இலக்கியப் படைப்பின் ஊடகம் மொழி ஆகும். மொழியானது அம் மொழியினைப் பேசும் மக்களின் கலாசாரத்தை மிளிரச் செய்வதென்பது மானுடவியலாளர்களின் கருத்தாகும். உன்னதமான ஆழம் மிகு மொழி மற்றும் அம் மொழியிலிருந்து கட்டியெழுப்பப்பட்ட இலக்கியத்தினைக் கொண்ட உயர்வான கலாசாரம் நிலவுகின்றதாக மார்டின் விக்கிரமசிங்க தனது மானுடவியலும் சிங்களக் கலாசாரமும் எனும் நூலில் குறிப்பிடுகின்றார். உலகில் எந்த மொழியில் உருவாகிய ஒரு இலக்கியமானாலும் தனது தாய் மொழியில் அதனை இரசிக்க நேரிடும் போது அதில் காணப்படும் நித்திய நிலையுடைய உன்னத ஆன்மீகத்தினையுடைய மனிதனாக மாற்றும் ஓர் ஒளிக்கீற்றினைத் தோற்றுவிக்கும்.

இன, மத பேதம் பாராத மனிதாபிமானம் தொடர்பான கூருணர்வினை ஏற்படுத்துவது இலக்கியத் துறைக்குச் சொந்தமான பாரியதொரு பலமாகக் காணப்படுகிறது. இதற்கமைய பல்வேறு இனங்கள் வாழும் ஒரு நாட்டின் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை ஏற்படுத்துவதில் இலக்கியக் கலையின் மூலம் பாரியதொரு பணியினை மேற்கொள்ள முடியும். எமது நாட்டில் நிலவிய யுத்தத்தின் பின்னர் நிலைபேறான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் பிரதானமான இரு இனங்களுக்கிடையே கலாசாரங்களுக்கு இடையிலான ஒரு பாலமாக இலக்கியக் கலையினைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் இன்று முக்கியம் பெறுகிறது. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய 'ஆணைக்குழுவின் அறிக்கையும் இதனை வலியுறுத்துகிறது. மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமானது இதற்கு முன்னர் மொழியும் மனிதாபிமானமும் என்ற தலைப்பில் மாணவர்களுக்கிடையே கட்டுரைப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்து அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அதன் ஒரு தொடர்ச்சியாக தமிழ் மற்றும் சிங்கள மாணவர் சமூகத்தைப்

பிரதிநிதித்துவப்படுத்தி இலக்கிய கலைப் போட்டித் தொடர் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களை ஒரே கூரையின் கீழ் ஒன்றிணைந்து இலக்கியக் கலைப் படைப்புக்கள் தொடர்பான பல செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. முதற் கட்டமாக மத்திய மற்றும் ஊவா ஆகிய மாகாணங்கள் தெரிவுசெய்யப்பட்டன. தற்போதைய கல்வி முறையிலிருந்து கைவிடப்பட்டு வரும் இலக்கியக் கலை இரசனை தொடர்பாக மாணவர் மத்தியில் ஆர்வத்தினை ஏற்படுத்துவதற்கும் இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் முக்கியம் பெறுகிறது. சிங்கள, தமிழ் மாணவர் இலக்கியக் கலை விழாவினை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட செயலமர்வும் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. கண்டி இளைஞர் பௌத்த சங்க அரங்கிலும் பதுளை பொது மக்கள் நூலகத்தின் கேட்போர் கூடத்திலும் இடம்பெற்ற செயலமர்வில் நூற்றுக் கணக்கானவர்கள் பங்கேற்றனர். மத்திய மாகாணத்தின் செயலமர்வுக்கு 447 மாணவ மாணவிகள் கலந்துகொண்டதுடன் ஊவா மாகாண செயலமர்வில் எட்டுப் பேர் கலந்து கொண்டனர். மத்திய மாகாண செயலமர்வில் 179 ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஊவா மாகாண செயலமர்வில் 31 ஆசிரியர் மற்றும் பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.

தமிழ் – சிங்கள மாணவர் இலக்கியக் கலைப் போட்டியின் வெற்றியாளர்கள் :

மத்திய மாகாணம்

ஓவியம் (சிங்களம்) – ஆரம்பத் தொகுதி

முதலாம் இடம்
ரீ.டப்.ஜீ. தஷேனி நவந்தியா ஜீவந்தி
மா/கணங்கமுவ வித்தியாலயம், புகையிலைத் தோட்டம், மாத்தளை
இரண்டாம் இடம்
சுரங்கி திமுத்துமாலி குமாரி – கண்டி/அங்கம்மன வித்தியாலயம்
மூன்றாம் இடம்
கே.ஜீ. தருனிகா மல்ஷானி – கண்டி/புனித அன்றூ வித்தியாலயம், கம்பளை

ஓவியம் (தமிழ்) – ஆரம்பத் தொகுதி

முதலாம் இடம்
எஸ்.அசின்த் – கண்டி/ திரித்துவக் கல்லூரி
இரண்டாம் இடம்
எச்.எம். ஹமீனா –கண்டி/ அக்குரணை முஸ்லிம் மகளிர் கல்லூரி
மூன்றாம் இடம்
எம்.ஜே. ஷிமாஸ் – கண்டி/சித்திலெப்பை முஸ்லிம் மகா வித்தியாலயம்

ஓவியம் (சிங்களம்) – 6–9 தொகுதி

முதலாம் இடம்
ரீ.டப்.ஜீ. ஷானிகா செவ்வந்தி – மா/ கனங்கமுவ வித்தியாலயம்
இரண்டாம் இடம்
எம்.எம்.ஜே.பீ. ஹேரத் – மகா/தெய்/உடுதும்பரை இரண்டாம் நிலைப் பாடசாலை
மூன்றாம் இடம்
பீ.எம். லக்மால் சந்தகெலும் பாலசூரிய – கண்டி/பராக்கிரம மத்திய மகா வித்தியாலயம்

ஓவியம் (தமிழ்) – 6–9 தொகுதி

முதலாம் இடம்
எஸ். அம்ரிதா – மா/பாக்கியம் தேசிய பாடசாலை
இரண்டாம் இடம்
அஷ்லா அலிகான் – கண்டி/மதீனா மத்திய கல்லூரி
மூன்றாம் இடம்
எஸ். இந்துஷா – மா/பாக்கியம் தேசிய பாடசாலை

ஓவியம் (சிங்களம்) – 10–12 தொகுதி

முதலாம் இடம்
எம்.ஏ..எஸ். பிரியங்கிகா –கண்டி/ கம்பளை பௌத்த வித்தியாலயம்
இரண்டாம் இடம்
கே. எரந்தி ஹர்ஷனி கோதாகொட – மா/கனங்கமுவ வித்தியாலயம்
மூன்றாம் இடம்
எஸ். ஜீ. ஹிருனி இஷாரா சேனாரத – மமா/வலள ஏ ரத்நாயக்க மத்திய கல்லூரி

ஓவியம் (தமிழ்) – 10–12 தொகுதி

முதலாம் இடம்
ராஜேந்திரன் அபிஷ்னவி – மா/பாக்கியம் தேசிய பாடசாலை
இரண்டாம் இடம்
கணேஷன் துலானி கௌரி – மா/பாக்கியம் தேசிய பாடசாலை
மூன்றாம் இடம்
எம்.என்.எப். அஷீகா கண்டி/ மதீனா மத்திய கல்லூரி

கவிதை (சிங்களம்) – 6–9 தொகுதி

முதலாம் இடம்
ஏ.ஜீ. செவ்மினி பபசரா – மமா/பரணகம மத்திய கல்லூரி
இரண்டாம் இடம்
எஸ்.ஏ.ரன்சினி வத்சலா சமரவீர – மமா/கண்டி பெலேப்பே கனிஷ்ட வித்தியாலயம்
மூன்றாம் இடம்
சீ. செவ்மினி ஷசினிகா அளுத்கம – கண்டி/ ஹேவாஹெட்ட மத்திய கல்லூரி

கவிதை (தமிழ்) – 6–9 தொகுதி

முதலாம் இடம்
பீ.பிரனீத்தா – மா/பாக்கியம் தேசிய பாடசாலை
இரண்டாம் இடம்
ஏ.தர்ஷிகா தினுஷ் கௌரி –மா/பாக்கியம் தேசிய பாடசாலை
மூன்றாம் இடம்
எஸ். நிமேஷா – மா/பாக்கியம் தேசிய பாடசாலை

கவிதை (சிங்களம்) – 10–12 தொகுதி

முதலாம் இடம்
எஸ்.ஆர். ஹஷினி சத்துரிக்கா – மமா/வலள ஏ. ரத்நாயக்க மத்திய கல்லூரி
இரண்டாம் இடம்
எம்.ஏ. லஹிரு சின்தக்க மனதுங்க – தர்மராஜ வித்தியாலயம், கண்டி
மூன்றாம் இடம்
பீ.டீ.பீ. மதுஷானி – டெல்டா கெமுனுபுர மகா வித்தியாலயம்

கவிதை (தமிழ்) – 10–12 தொகுதி

முதலாம் இடம்
ரீ. வசந்தகீதா – மா/பாக்கியம் தேசிய பாடசாலை
இரண்டாம் இடம்
த.விதூஷானி – மா/பாக்கியம் தேசிய பாடசாலை
மூன்றாம் இடம்
எம்.எஸ்.எம். ஷாஹிர் –கண்டி /அகுரணை சாஹிரா தேசிய பாடசாலை

சிறுகதை (சிங்களம்) – 6–9 தொகுதி

முதலாம் இடம்
டப்.எம்.டீ.எஸ். வீரசிங்க – நு/பொரமடுல்ல மத்திய மகா வித்தியாலயம்
இரண்டாம் இடம்
எஸ்.எம்.எல்.ஜீ. புத்திக காயத்ரி – நு/பொரமடுல்ல மத்திய மகா வித்தியாலயம்
மூன்றாம் இடம்
ஆர்.எம். காவிந்தியா சந்தீபனி ரணசிங்க – நு/பொரமடுல்ல மத்திய மகா வித்தியாலயம்

சிறுகதை (தமிழ்) – 6–9 தொகுதி

முதலாம் இடம்
எம். ஜீவனி – மா/பாக்கியம் தேசிய கல்லூரி
இரண்டாம் இடம்
சி. பானுஜா – மா/பாக்கியம் தேசிய கல்லூரி
மூன்றாம் இடம்
க. பிரியந்தி – மா/பாக்கியம் தேசிய கல்லூரி

சிறுகதை (சிங்களம்) – 10–12 தொகுதி

முதலாம் இடம்
எச்.எம். சுசந்தி உபேக்ஷா கருணாரத்ன – கண்டி /ஹேவாஹெட்ட மகா வித்தியாலயம்
இரண்டாம் இடம்
ஏ.ஜீ. தர்ஷனி மதுமாலி – மமா/ பரணகம மத்திய மகா வித்தியாலயம்
மூன்றாம் இடம்
டி.எம்.நதீகா லக்மாலி தனபால – மமா /ரூபஹ ஸ்ரீ சத்தானந்த இரண்டாம் நிலை பாடசாலை

சிறுகதை (தமிழ்) – 10–12 தொகுதி

முதலாம் இடம்
எஸ். மதுஷா – மா/பாக்கியம் தேசிய கல்லூரி
இரண்டாம் இடம்
என்.எஸ்.எம். ஷாகிர் – கண்டி/அகுரண சாஹிரா தேசிய பாடசாலை
மூன்றாம் இடம்
டீ. வசந்தகீதா – மா/பாக்கியம் தேசிய கல்லூரி

கட்டுரைப் போட்டி (சிங்களம்) – 6–9 தொகுதி

முதலாம் இடம்
அலுத்கெதர உபதேஷிகா ஹேமாமாலி குணவர்தனா – மா/நா/மேல்பிடிய மகா வித்தியாலயம்
இரண்டாம் இடம்
எச்.ஏ.தனஞ்சனி நுவன்திகா – நு/பொரமடுல்ல மத்திய மகா வித்தியாலயம்
மூன்றாம் இடம்
ஜீ.ஏ.எஸ்.வீ.பீ கமஆரச்சி – நு/பொரமடுல்ல மகா வித்தியாலயம்
மூன்றாம் இடம்
பீ.எம்.ஜீ.என். பிராசதனி ஜயவர்தன – மப/வில்/ஹத்தொட அமுன மகா வித்தியாலயம்

கட்டுரைப் போட்டி (தமிழ்) – 6–9 தொகுதி

முதலாம் இடம்
என். பவனிஷா – மப/நு/ஆகரபதனை தமிழ் மகா வித்தியாலயம்
இரண்டாம் இடம்
ஜே. ரெக்னோ – மப/நு/ஆகரபதனை தமிழ் மகா வித்தியாலயம்
மூன்றாம் இடம்
ஆர். யதுஷா – மப/நு/ஆகரபதனை தமிழ் மகா வித்தியாலயம்

கட்டுரைப் போட்டி (சிங்களம்) – 10–12 தொகுதி

முதலாம் இடம்
எம்.ஜீ.நிமேஷா சிறிமதி குமாரி – மா/உகு/லேலிஅபே மகா வித்தியாலயம்
இரண்டாம் இடம்
டப்.ஜீ.இனோகா ஹன்சனி குமாரி – கண்டி/கம்பளை பௌத்த மகா வித்தியாலயம்
மூன்றாம் இடம்
பீ.ஜீ.என்.எஸ். வத்சலா – கண்டி/பரணகம மத்திய மகா வித்தியாலயம்

கட்டுரைப் போட்டி (தமிழ்) – 10–12 தொகுதி

முதலாம் இடம்
டீ. வசந்தகீதா – மா/பாக்கியம் தேசிய கல்லூரி
இரண்டாம் இடம்
நஜிமுன் நிசா
மூன்றாம் இடம்
எல்.ஜீ.எம்.எஸ். சாகிராபானு – கண்டி/அகுரணை சாஹிரா மகா வித்தியர்லயம்

ஊவா மாகாணம்
ஓவியம் (சிங்களம்) – 6–9 தொகுதி

விருது வழங்கல்
எம்.எப். பாதிமா சமீரா – பதுளை/ஆனந்த மத்திய மகா வித்தியாலயம்

ஈ சவிது ஆகாஷ் – மொன/சோமாதேவி மத்திய வித்தியாலயம்
எச்.எம். தாரிகா லக்ஷானி – மொன/நிஸ்ஸங்கா மத்திய மகா வித்தியாலயம்
நெத்மி வித்தியானி லியனகே – பதுளை/வல்ஹபுதென்ன மத்திய மகா வித்தியாலயம்

ஓவியம் (தமிழ்) – 6–9 தொகுதி

விருது வழங்கல்
ஏ.யஸ்மிகா – பதுளை/பஸ்ஸரை தமிழ் மகா வித்தியாலயம்
எஸ்.தில்ருக்ஷி – பதுளை/பஸ்ஸரை தமிழ் மகா வித்தியாலயம்
ஆர்.பிரபாசிகா – பதுளை/பஸ்ஸரை தமிழ் மகா வித்தியாலயம்
பீ.துலக்ஷிகா – பதுளை/பஸ்ஸரை தமிழ் மகா வித்தியாலயம்
எம்.எஸ். நுவைஸ்பீன் – பதுளை/பஸ்ஸரை தமிழ் மகா வித்தியாலயம்

கவிதை (சிங்களம்) – 6–9 தொகுதி

முதலாம் இடம்
எச்.எம்.விதுஷா சயூரி தினேஷிகா ஹேரத் –மொன/நிஸ்ஸங்க தேசிய பாடசாலை
இரண்டாம் இடம்
ஆர்.எம்.பிரதீபா செஹானி – பதுளை / தெஹிகொல்ல மகா வித்தியாலயம்
மூன்றாம் இடம்
எச்.சம். பிரியாணி தீப்திகா சதமாலி – பதுளை / தெஹிகொல்ல மகா வித்தியாலயம்

கவிதை (தமிழ்) – 6–9 தொகுதி

விருது வழங்கல்
சீ.ரினால்டா – பதுளை/பஸ்ஸரை தமிழ் மகா வித்தியாலயம்
கே. லுக்ஷனி – பதுளை/பஸ்ஸரை தமிழ் மகா வித்தியாலயம்
கே. யசோதா – பதுளை/பஸ்ஸரை தமிழ் மகா வித்தியாலயம்

கவிதை (சிங்களம்) – 10–12 தொகுதி

முதலாம் இடம்
எம்.பீ.ஹசினி பிரியமன்தினி – பதுளை/ஒருபெதிவெவ இரண்டாம் நிலை பாடசாலை
இரண்டாம் இடம்
பீ.எம்.பீ.ஜீ. தருஷிகா லக்ஷானனி – பதுளை/ஒருபெதிவெவ மகா வித்தியாலயம்
மூன்றாம் இடம்
எம்.என். திமானி கௌசல்யா கருணாதிலக – பதுளை / தெஹிகொல்ல மகா வித்தியாலயம்

கவிதை (சிங்களம்) – 6–9 தொகுதி

விருது வழங்கல்
எம்.எம். குஷானி இமல்கா – பதுளை/ கிராபே ஸ்ரீ கேமாநந்த மகா வித்தியாலயம்
ஜே.எம். எரந்தி வாசனா – மொன/நிஸ்ஸங்க தேசிய பாடசாலை

சிறு கதை (சிங்களம்) – 10–12 தொகுதி

விருது வழங்கல்
ஆர்.பீ. மதுஷிகா சதுராணி – பதுளை/ஒருபெதிவெவ இரண்டாம் நிலை பாடசாலை
கே.ஆர்.துலானி நில்வலா பெரேரா – பதுளை/வல்ஹபுதென்ன மத்திய மகா வித்தியாலயம்

கட்டுரை (சிங்களம்) – 6–9 தொகுதி

முதலாம் இடம்
கே.கே.பீ. நிரோஷா தில்ஷானி – பதுளை/தெஹிகொல்ல மகா வித்தியாலயம்
இரண்டாம் இடம்
என்.எம். புபுதுனி மயன்தி பதுளை/பண்டாரவிலை மத்திய மகா வித்தியாலயம்
மூன்றாம் இடம்
எஸ்.எம். நெத்மி காவின்தயா – பதுளை/தெஹிகொல்ல மகா வித்தியாலயம்

கட்டுரை (தமிழ்) – 6–9 தொகுதி

விருது வழங்கல்
எம்.பிரதீபா – பதுளை/பஸ்ஸரை ஸ்பிரிங்வேலி தமிழ் மகா வித்தியாலயம்

கட்டுரை (சிங்களம்) – 10–12 தொகுதி

முதலாம் இடம்
பீ.தனூஜா சந்திரமாலி – மொன/பிருகும்புர இரண்டாம் நிலை பாடசாலை
இரண்டாம் இடம்
என்.எம். கல்பனா ஜீவன்தி – பதுளை/ தர்மபால இரண்டாம் நிலை மகா வித்தியாலயம்
மூன்றாம் இடம்
பீ.சசின்த நாமல் – மொன/பீ/பிருகும்புர இரண்டாம் நிலை பாடசாலை



இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு மொழிபெயர்ப்பு இலக்கியம் விரிவுபடுத்தப்படல் வேண்டும்.

இலங்கையின் மொழி உரிமைகள் தொடர்பாக அவதானஞ் செலுத்துகின்ற போது மொழிபெயர்ப்பு இலக்கியத்திற்கு முக்கிய ஒரு அந்தஸ்து கிடைக்கப்பெறுகிறது. மொழிபெயர்ப்பு இலக்கியம் மற்றும் இரு மொழி உரிமைகள் மேம்பாடு என்பனவற்றின் போது ஊடகவியலாளர் கலைஞர் இலக்கியவாதி, மொழிபெயர்ப்பாளர் என்ற வகையில் நிலார் என் காசிமுடன் இவ் அனைத்து திசைகள் பற்றிய ஒரு கலந்துரையாடலுக்காக இவ்வாறு விபாஷா பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடற் குறிப்பு
சுதர்ஷனி குமாரி
தமுனுபொல

பல்லின இனக்குழுக்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் இனங்களுக்கிடையே புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் உறுதி செய்கையில் மொழிபெயர்ப்பு இலக்கியத்தின் மூலம் பாரியதொரு பணி இடம் பெறுகிறதென்பது பலரதும் கருத்தாகவுள்ளது. அது பற்றிய உங்களது மதிப்பீடு யாது?

எந்தவொரு நாட்டை எடுத்தாலும் மொழிபெயர்ப்பு இலக்கியத்தின் தேவை காணப்படுகிறது. விசேடமாக பல்வேறு சமூகங்கள் மற்றும் கலாசாரங்களுக்கிடையே அறிவு, அனுபவம் மற்றும் ஆக்கத்திறன் நிபுணத்துவங்களைப் பகிர்ந்துகொள்ளல் இங்கு மிக முக்கியம் பெறுகிறது. நம்மைப்போன்ற தீவு மனப்பாங்குடன் வாழ்க்கை நடாத்தும் ஒரு நாட்டில் மொழிபெயர்ப்பு அத்தியாவசியமாகவுள்ளது. ஆங்கிலம் மற்றும் ஏனைய மொழிகளில் வரும் மொழிபெயர்ப்பு நூல்கள் மூலம் மேற்கொள்ளப்படும் சேவையானது இங்கு உயர்வான பெறுமதியினைக் கொண்டுள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்கள் பற்றி திரும்பிப் பார்ப்போமேயானால் அது நன்கு புலப்படுகிறது. விசேடமாக ரஷ்ய இலக்கிய நூல்களை வாசிப்பதன் மூலம் இடதுசாரிகள் வளம் பெறுகின்றனர். அவ்வாறே இந்திய நூல்களை வாசிப்பதன் மூலம் ஒரு சில தலையீடுகள் ஏற்படவில்லையென ஒருவரும் கூற முடியாது. இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் சிங்கள நூல்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் நூல்கள் சிங்கள மொழிக்கும் மொழிபெயர்க்கும் பணியே மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. குறித்த மொழிபெயர்ப்புக் கலையின் மூலமாக எமது சகோதர மக்களிடையே நிலவும் விரிசலைக் குறைத்து சகோதர இனங்களுக்கிடையே நெருங்கிய ஒருமைப்பாட்டினை கட்டியெழுப்ப முடியும். ஆயினும் இலங்கையில் நாம் எதிர்பார்த்த விதமாக அவ்வாறான ஓர் ஒருமைப்பாட்டினைக் கட்டியெழுப்புவது கடினமாகும். ஏனைய மொழிபெயர்ப்பு நூல்களைப் போற்றுகின்றதைப் போன்றே சிங்களம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு சந்தர்ப்பங்கள் வேகமாக அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் ஒரு ஆயுதமாக



மொழிபெயர்ப்பு இலக்கியத்தை இனங்காண்பதில் இலங்கையின் மொழிபெயர்ப்பு இலக்கியம் சார்ந்ததாக காணப்படும் பிரச்சினைகள் யாவை?

சிங்களம் மற்றும் தமிழ் நூல்கள் மொழிபெயர்ப்பு தொடர்பாக நோக்கும் போது இவ் இரு மொழிகள் தொடர்பான போதியளவு கல்விமான்கள், இலக்கியவாதிகள் மற்றும் கலைஞரகள் ஆகியோர் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே உள்ளனர். இலங்கையில் இரு மொழிகளிலும் பணியாற்றும் நடைபாதை வியாபாரிகள், பஸ் நடத்துனர்கள் காணப்படுகின்ற போதும் இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற இலக்கியவாதிகள் மிகவும் அரிதாகக் காணப்படுகின்றமை இலக்கியத்துறை எதிர்நோக்கும் மிக முக்கிய பிரச்சினை ஆகும் என்பது இங்கு குறிப்பிடப்படல் வேண்டும். மொழிபெயர்ப்பு இலக்கியக் கலைத் துறையில் பிரவேசிப்பதற்கான ஓர் ஊக்கம் இந் நாட்டு சமூக அரசியல் பொருளாதார சந்தர்ப்பத்தின் வாயிலாக மிகவும் குறைந்தளவிலேயே கிடைக்கப்பெறுகிறது என்பது தெளிவாகிறது. ஒவ்வொரு மனிதனும் நவீன சமூகத்தில் வாழ்க்கை நடாத்துவதற்கு பாரியதொரு போட்டியில் ஈடுபட வேண்டியுள்ளது. இவ்வாறான ஒரு போட்டியின் மத்தியில் மொழிபெயர்ப்புக்காக வழங்கப்படும் நிதிசார்ந்த பெறுமதி மிகக் குறைவாகும். அது இரு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்கள் மொழிபெயர்ப்பு இலக்கியத்தினை நோக்கிப் பயணிக்கும் பாதைக்குத் தடை விதிக்கிறது. விசேடமாக மொழிபெயர்ப்பு இலக்கியத்தில் நிதிசார்ந்த விடயம் முக்கியம் பெறாவிடினும் அனைத்து விடயங்களுக்கும் குறித்த ஒரு பெறுமதி கிடைக்கப்பெறல் வேண்டும். இதன்போது அரச துறையைப் போன்றே தனியார் துறையிலும் இது தொடர்பான குறிப்பிடத்தக்க ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதில்லை. அதன் போது மொழிபெயர்ப்பாளர்கள் அமைதிகாக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

நவீன இலங்கைச் சமூகத்தில் உலக இலக்கிய நூல்கள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதைக் காண முடிந்த போதிலும் சிங்கள நூல்கள் தமிழிலும் தமிழ் நூல்கள் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்படல் மந்தகதியில் திகழ்வதற்கான காரணம் யாது ?

30 வருட யுத்தத்தை எதிர்கொண்ட ஒரு நாடு என்ற ரீதியில் கூருணர்வுடைய இரு மொழி மூலமான கல்விமான்களை உருவாக்குவதற்கான பாரியதொரு தேவை ஏற்பட்டுள்ளது. பெரும்பாலும் சிங்களம் ஆங்கிலம் அல்லது ஆங்கிலம் – தமிழ் கல்விமான்கள் அதிகளவில் காணப்படுகின்றனர். இவர்களை மும்மொழி கல்விமான்களாக நாம் மாற்ற வேண்டும். அவ்வாறே ஊடகங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கலந்துரையாடல்கள் பலவற்றில் நாம் மேற்கத்திய இலக்கியத்திற்கு வழங்கும் முன்னுரிமையினை சிங்களம் மற்றும் தமிழ் இலக்கியங்களுக்கு வழங்குதல் கட்டாயமாகும். அவ்வாறே சிங்களம் தமிழ் நூல்கள் ஒடுக்கப்படுதல் தொடர்பாக சமூகத்தில் ஒரு பேசு பொருளைக் கட்டியெழுப்புதல் அத்தியாவசியமாகும். பெரும்பாலும் ஊடக கலந்துரையாடல்களை வழிநடத்தும் நபர்களுக்கு அது பற்றிய புரிந்துணர்வு இல்லாதிருக்கலாம் நவீன தமிழ் கவிதைகளுக்கும் சிறுகதைகளுக்கும் உலக இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பெறுமதி கிடைத்துள்ளது. ஆயினும் இலங்கையின் உன்னத தரத்திலான அவ்வாறானதொரு தலையீடு இல்லாது போனாலும் கூட பராக்கிரம கொடிதுவக்கு போன்றவர்களைத் தலையிட்டமை இவை ஆங்காங்கே நிகழ்ந்த சிறு சிறு தலையீடுகள் மற்றும் முயற்சிகள் அன்றி முக்கியமான ஊக்கப்படுத்தல்கள் அல்ல.

மொழிபெயர்ப்பு இலக்கியத்திற்கு தன்னை அர்ப்பணித்துள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மொழிபெயர்ப்பு இலக்கியத்திற்கு வழங்கும் பங்களிப்பு போதுமானதா ?

இதன் போது தனிப்பட்ட தலையீடுகள் மற்றும் நிறுவன ரீதியான தலையீடு ஆகிய இரண்டும் உரிய முறையில் காணப்படுதல் மற்றும் பேணிச் செல்லல் என்பன மிகவும் முக்கியமானதாகும். தனிப்பட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகளை நம்மால் பல்வேறு காலங்களில் காண முடிந்தாலும் அது தொடர்ந்து பேணப்படாமையே இதிலுள்ள பிரச்சினையாகும். தனிப்பட்ட ரீதியிலான பல்வேறு தலையீடுகள் ஆங்காங்கே தனியான இடம் பெற்றாலும் கூட அவற்றுள் கடந்த இரண்டு தசாப்த காலத்தினுள் இது தொடர்பாக அரச சார்பற்ற அமைப்புக்கள் மேற்கொண்ட தலையீடுகளும் அர்ப்பணிப்பும் உண்மையிலேயே போற்றத்தக்கதாகும். இங்கு மொழிபெயர்ப்பிற்கு நிதி ரீதியான வசதிகள் அளிக்கப்படல், மொழிபெயர்ப்பு நூல்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்படல் என்பவற்றை நாம் காணலாம். அரச மட்டத்தில் மிகவும் அரிதாக இவ்வாறானவைகளை எம்மால் காண முடிந்தது. 1994 இல் டிலான் பெரேரா அமைச்சர் அவர்கள் "சாமகூரி" விழாவினை ஏற்பாடு செய்து சிங்கள, தமிழ் மொழி பெயர்ப்பாளர்களை கௌரவித்தார். அவ்வாறே சமீப காலத்தில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அவர்களினாலும் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை நாம் கண்டோம். அவ்வாறே கலாசார அலுவல்கள் அமைச்சும் இது போன்ற ஒரு சில பங்களிப்புக்களைச் செய்தது. ஆயினும் இவை மொழிபெயர்ப்பு இலக்கியத்தின் இருப்பிற்கு செயல் வடிவம் கொடுக்கும்



இரு மொழிகள் தொடர்பான போதியளவு கல்விமான்கள், இலக்கியவாதிகள் மற்றும் கலைஞரகள் ஆகியோர் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே உள்ளனர். இலங்கையில் இரு மொழிகளிலும் பணியாற்றும் நடைபாதை வியாபாரிகள், பஸ் நடத்துனர்கள் காணப்படுகின்ற போதும் இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற இலக்கியவாதிகள் மிகவும் அரிதாகக் காணப்படுகின்றமை இலக்கியத்துறை எதிர்நோக்கும் மிக முக்கிய பிரச்சினை ஆகும் என்பது இங்கு குறிப்பிடப்படல் வேண்டும்.

பிரதானமானதொரு நீரோட்டமாக அமையவில்லை. நாட்டின் நிகழ்ச்சி நிரல் இதற்கு முக்கியமான ஒரு இடத்தினை வழங்கி செயற்படாமையே இதற்கான காரணமாகும்.

இலங்கையின் மொழிபெயர்ப்பு இலக்கியமானது பல்வேறு விதமான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. இப் பிரச்சினைகளைப் போக்குவதற்கு எவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் ?

இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இரண்டு படிமுறைகளை நாம் காண்கிறேன். தற்போது மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் எழுத்தாளர்கள் மொழிபெயர்ப்பாளர்கள் ஆகியோரை உற்சாகப்படுத்தி அவர்களது பணியினை தடையின்றி முன்னெடுத்துச் செல்லல் இங்கு மிகவும் முக்கியமானதாகும்.

அவ்வாறே இந் நாட்டின் நிகழ்ச்சி நிரலில் மொழிபெயர்ப்புக்கு வழங்கப்பட்டுள்ள கரிசனையும் அந்தஸ்தும் மேம்படுத்தப்படல் வேண்டும். அதுமட்டுமன்றி குறித்தொதுக்கப்பட்டதும் முறையானதும் தெளிவானதுமான ஒரு நோக்கில் இப் பணிக்கான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படல் வேண்டும். அதன் போது இவற்றுக்குப் பொருத்தமான பொறிமுறையொன்று காணப்படல் வேண்டும். அவ்வாறே இப் பணிகளில் ஈடுபடுகின்ற நபர்களுக்கு சமூகத்தில் காணப்படும் பௌதீக மற்றும் மானுடப் பெறுமதிகள் என்பவற்றை மேம்பத்தி இவர்களை உற்சாகப்படுத்துவதற்கான முறையான ஒரு திட்டத்தைக் கட்டியெழுப்புதல் வேண்டும். இதன் போது அரச மற்றும் தனியார் ஊடகங்களிடம் ஒரு பாரிய பணிப்பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது.

இலங்கையில் எத்தனையோ தேசிய ரீதியிலான செய்திப் பத்திரிகைகள் காணப்படுகின்றன. ஆயினும் அப் பத்திரிகைகளில் சிங்களம் – தமிழ் கவிதைகள், சிறுகதைகள் என்பவற்றுக்கு எவ்வளவு இடம் ஒதுக்கப்படுகிறது ? என்பது பற்றி இங்கு கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். கமல் பெரேரா போன்ற நபர்கள் கடந்த காலங்களில் சிறந்த முயற்சிகளை மேற்கொண்ட போதும் தற்போது அவ்வாறான ஒன்றைக் காண முடியவில்லை. அடுத்த பரம்பரையினருக்கு மொழிபெயர்ப்புக் கலையினை ஒப்படைப்பதற்குப் பழக்குவதே ஏனைய முக்கிய விடயமாகும். நவீன சமூகத்தில் ஆங்கிலம் மற்றும் கணனி அறிவினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் சமூகத்தில் உயர்வான பௌதீக மற்றும் மானுடப் பெறுமதி கிடைக்கப் பெறுவதன் காரணமாக பிள்ளைகள் மொழிபெயர்ப்பு இலக்கியம் மீது ஆர்வம் கொள்வதில்லை. இதனோடு தொடர்புடைய பௌதீக மற்றும் மானுடப் பெறுமதிகளை மொழிபெயர்ப்பு இலக்கியத்திற்கு வழங்கி நாளைய உலகைப் பொறுப்பேற்கவுள்ள சந்ததியினரை இதன் மீது ஆர்வம்கொள்ள வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அரச அலுவலர்கள் இருமொழிகளில் ஆற்றல் பெறுவது கட்டாயம் என்பதனை நாங்கள்அறிவோம் அதே போன்று அவர்களது சம்பளத்தில் இருமொழி ஆற்றலுக்குரிய ஒரு ஆகுசெலவும் கிடைக்கப் பெறுகிறது. ஆயினும் பரீட்சைக்கும் ஆகு செலவிற்கும் மாத்திரம் இருமொழி பற்றிய ஆற்றல் வரையறுக்கப்படுவதன் காரணமாக இருமொழி ஆற்றல் இல்லையென்பது தெரிகிறது. ஆகவே அரச உத்தியோகத்தர்கள் கூட தனது இருமொழி ஆற்றலை பொது மக்களுடன் கருமமாற்றுவதன் பொருட்டு பயன்படுத்தப்படுவதனை அமுல்படுத்துவதற்கான உரிய முறைகள் கட்டியெழுப்பப்படல் வேண்டும். அவ்வாறே தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் இப் பணியின் போது முக்கியமானதும் சாதகமானதுமான விதத்தில் அவற்றைப் பிரயோகித்து தலைவர் ஒருவருக்கு அல்லது அவ்வந்த அமைச்சுக்களிடம் இவை ஒப்படைக்கப்படல் வேண்டும். அவ்வாறே நாடு முழுவதும் அமுலுக்கு வரும் வகையில் மொழிபெயர்ப்பு இலக்கியத்தில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றினை உருவாக்குதல் அத்தியாவசியமாகின்றது.

விபாஷா போன்ற சஞ்சிகைகளின் மூலம் இருமொழிகள் தொடர்பான அறிவுக்கு மேலதிகமாக இவ்வாறான முறையில் அதனை முன்னெடுத்துச் செல்லலானது மிகவும்வரவேற்கத் தக்கதாகும் என்பது பற்றி இங்கு கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறே இந் நாட்டின் மொழி ரீதியானதும் கலாசார ரீதியானதுமான பல்வகைமை மற்றும் அவ் உரிமைகளை உறுதி செய்வதற்கு இத்தகைய வெளியீடுகள் இந்த நாட்டிற்கு மென்மேலும் தேவைப்படுகின்றன.

மொழி உரிமைகளுக்காக முறைப்பாடு செய்தல்

இலங்கைப் பிரஜைகளின் மொழி உரிமைகளை மேம்படுத்துவதற்காக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் பாரியதொரு பணியினையும் பணிப்பொறுப்பினையும் மேற்கொண்டுள்ளது. விசேடமாக இதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய அரச நிறுவனங்களுக்கு விழிப்புணர்வூட்டி பிரசைகளின் மொழி உரிமையினைப் பாதுகாத்து அரச கரும மொழிக்கொள்கையை முறையாக அமுல்படுத்து முகமாக அவர்கள் பாரிய அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளனர். விசேடமாக மொழி உரிமைகள் மீறப்படலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் இங்கு முக்கியம் பெறுகிறது. அது விரிவான ஒரு செயன்முறையாகும்.

அதற்கமைய தனது சுய மொழியைப் பயன்படுத்தும் உரிமை தனக்கு இருப்பதாக பிரசைகளை விழிப்புணர்வூட்டி அரச தரப்பினர் வசமுள்ள பொறுப்பினை செயல் ரீதியாக நடைமுறைப்படுத்த நேர்ந்தது. எமது பங்காளி அமைப்புக்கள், பிரஜைகள் சபைகள் மற்றும் மொழிச் சங்கங்கள் என்பவற்றினூடாக பிரஜைகளின் மொழி உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொண்டு அவர்கள் மூலமாக பிரஜைகளின் மொழி உரிமைகள் மீறப்படல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொண்டோம். மொழி உரிமை மீறப்படல் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய நிறுவனங்களாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டதுடன் மொழி உரிமையானது மனித உரிமைகளையும் அரச கரும மொழிக்கொள்கையாகவும் இலங்கையின் சட்டத்தினால் வலியுறுத்தப்பட்டுள்ளமை இவ்வாறு இவை தெரிவு செய்யப்பட்டதற்கு அடிப்படையாக அமைந்தது. அதற்கமைய முதலாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டில் அரச துறையினால் மொழி உரிமை மீறப்பட்ட 26 சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்போந்த நிறுவனங்களில் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதற்கமைய முதலாம் கட்டத்தின் கீழ் மொழி உரிமை மீறப்பட்ட பரப்பெல்லையானது வரையறுக்கப்பட்ட ஒரு தன்மையைக் கொண்ட போதும் மொழி உரிமை தொடர்பாக பிரஜைகளின் அறிவு மற்றும் விழிப்புணர்வு என்பன அதிகரிக்கின்ற போது மொழி உரிமைகள் மீறப்பட்ட நிகழ்வுகள் பாரியளவில் எமக்கு அறிவிக்கப்பட்டன.

மேலுள்ள தரவுகளின் மூலம் அது தெளிவாகிறது. அவ்வாறே மக்கள் எம்மிடம் சமர்ப்பிக்கின்ற அனைத்து நிகழ்வுகளையும் நாம் முறைப்பாடுகளாக ஏற்புடைய அரச நிறுவனங்களிடம் சமர்ப்பித்ததற்கான காரணமாக சில நிகழ்வுகள் நீண்டகாலத்திற்கு முன் நிகழ்ந்தவையாகக் காணப்படல், கடிதம் அனுப்பப்பட்டிருப்பின் அக் கடிதத்தினை அனுப்பிய அதிகாரிகள் பற்றித் தெளிவாக குறிப்பிடப்படாமை, கடிதம் கிடைக்கப்பெற்ற நபர்களின் பெயர்கள் மீது கோடுகள் வரையப்பட்டிருத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். சில சமயங்களில் அரச துறையினால் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பில் முன்வருவதற்கு அவர்களிடம் குடிகொண்டிருந்த பயம் அதற்கான காரணமாகும் என்பதை நாம் அவர்களிடம் வினவிய கேள்விகள் மூலம் உறுதி செய்து கொண்டோம். அத்துடன் அது தொடர்பாக எவ்விதப் பயமும் இன்றி தனது உரிமைகளை உறுதி செய்துகொள்வதற்காக அவர்களுக்குள்ள உரிமையை நாம் அவர்களிடம் வலியுறுத்தினோம். அதன் வண்ணம் எம்மிடம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் அளவு ரீதியாக அதிகரித்ததுடன் முன்னரிலும் பார்க்க தரத்தில் கூடிய முறைப்பாடுகளும் எமக்கு கிடைக்கப்பெற்றன. அதற்கமைய மொழி உரிமை தொடர்பாக சமூகத்தில் நிலவிய குறைவான அறிவானது பாரியளவில் விரிவடைந்துள்ளது என்பதே எமது கணிப்பீடாகும்.

கட்டம்	முறைப்பாடுகளின் எண்ணிக்கை		மொத்தம்
	அரசத் துறை	தனியார் துறை	
01வது கட்டம்	26	–	26
02 வது கட்டம்	12	95	107
03 வது கட்டம்	93	14	107
04 வது கட்டம்	55	45	100
			340

துமிந்து மதுஷான்

2011 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பிரஜைகளின் மொழி உரிமை மீறப்பட்ட சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டு அது தொடர்பாக பொறுப்புள்ள அரச நிறுவனங்கள் என்ற வகையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் அரச கரும மொழிகள் ஆணைக் குழுவிற்கும் அடிக்கடி முறைப்பாடுகளைச் சமர்ப்பித்துள்ளதுடன் அளவு ரீதியாக அம் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 300 இற்கும் அதிகமாகும்.

பிரதானமாக இதுவரை நான்கு கட்டங்களின் கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவிற்கும் 340 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக இரண்டு ஆணைக்குழுவிடமும் 680 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அரச துறை தொடர்பாக 186 முறைப்பாடுகளும் தனியார் துறை அதாவது, நுகர்வோர் உரிமைகள் மீறப்படல்

கட்டம்	முறைப்பாடுகளின் எண்ணிக்கை									
	அரசத் துறை	எடுத்த நடவடிக்கைகளின் எண்ணிக்கை		நடவடிக்கை எடுக்கப்படாத எண்ணிக்கை		தனியார் துறை	எடுத்த நடவடிக்கைகளின் எண்ணிக்கை		நடவடிக்கை எடுக்கப்படாத எண்ணிக்கை	
		அ. மொ. ஆ.	ம. உ. ஆ	அ. மொ. ஆ	ம. உ. ஆ		அ. மொ. ஆ.	ம. உ. ஆ.	அ. மொ. ஆ.	ம. உ. ஆ.
01 வது கட்டம்	26	20	22	06	04	–	– –	2014/12/12 ஆம் திகதி இரு தரப்பினரையும் அழைத்து கலந்துரையாடப்படும்	–	2014/12/12 ஆம் திகதி இரு தரப்பினரையும் அழைத்து கலந்துரையாடப்படும்
02 வது கட்டம்	12	–	08	12	04	95	–		95	
03 வது கட்டம்	93	57	54	36	39	14	–		14	
04 வது கட்டம்	55	–	30	48	25	45	–		45	
மொத்தம்	186	77	114	102	72	154	–		154	

தொடர்பாக 154 முறைப்பாடுகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பிலான விபரமான தரவுகள் மேலுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

இம் மொத்த முறைப்பாடுகளுள் முதலாம், இரண்டாம், மூன்றாம் கட்டங்களின் கீழ் எம்மால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவிற்கும் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளுள் மிகவும் முக்கியமானதும் பொதுமக்களுக்கு பெரிதும் உதவியாக அமைந்துள்ளதுமான சில முறைப்பாடுகளளை பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றோம்.

பண நோட்டுகள்

பண நோட்டுகள் இன்றியமையாத வாசகங்கள் சில தமிழ் மொழியில் குறிப்பிடப்படாமை தொடர்பான முறைப்பாடு மிக முக்"கியமானதாகும். இது தொடர்பாக உயர் நீதிமன்றமானது இப் பண நோட்டுகளை அரச கரும மொழிக் கொள்கைக்கு ஏற்ப அச்சிடுமாறு உரிய அதிகாரிகளுக்கு கட்டளையிட்டுள்ளது. இத் தீர்மானமானது இது வரை நடைமுறைப்படுத்தப்படாத போதும் தமிழர்களும் இலங்கை பிரஜைகளாவர் என்ற உணர்வினை அவருக்கு உணர்த்துவதற்காக நாம் பெற்றுக் கொண்ட ஒரு வெற்றியாகும் என நாம் கருதுகின்றோம்.

பொலிஸ் முறைப்பாடுகள்

தமிழ் பேசும் நபர்களின் முறைப்பாடுகளைப் பொலிஸார் சிங்கள மொழியில் பதிவு செய்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு பதில் குறியாக தமிழ் மொழி அறிவுடைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஏற்புடைய பொலிஸ் நிலையங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய தனது ஆரம்ப தகவல்களில் நிலவும் குறைப்பாடுகளை நிவர்த்தி செய்து நியாயத்தை நோக்கிப் பயணிக்கும் பாதையிலுள்ள தடைகளை நீக்குவதற்கு நாம் பங்களிப்பு செய்துள்ளோம்.

மருந்துப் பொதிகள்

மருந்துப் பொதிகளில் உள்ள தகவல்கள் மும்மொழிகளில் குறிப்பிடப்பட்டிராமை தொடர்பான முறைப்பாட்டிற்கு ஏற்ப ஒரு தொகுதி மருந்துப் பொதிகள் தொடர்பில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகள் இணங்கியுள்ளனர். இதன் மூலம் தான் பயன்படுத்தும் மருந்துகள் பற்றிய தகவல்களை தனது தாய் மொழியில் அறிந்து கொள்வதற்கான உரிமையை உறுதி செய்து மொழி காரணமாக ஏற்படவிருந்த அனர்த்தங்கள் பலவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க முடிந்துள்ளது.

பஸ்வண்டிகளின் பெயர்ப்பலகைகள்

தமது அன்றாட வாழ்வின் போக்குவரத்திற்காக பயன்படுத்துகின்ற பஸ்வண்டிகள் போய்ச்சேரும் இடத்தின் பெயர்ப் பலகைகள் ஒரு மொழியில் காட்டப்பட்டிருப்பதன் காரணத்தால் பலர் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். அது தொடர்பாக நாம் மேற்கொண்ட முறைப்பாடுகளுக்கு அமைவாக இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களிலும் தனியார் பஸ்களிலும் பெயர்ப் பலகைகள் அரச கரும மொழிக் கொள்கைக்கு அமைவாக வடிவமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

புகையிரத அறிவிப்புகள்

போக்குவரத்து ஊடகங்களில் புகையிரதப் போக்குவரத்து அறிவிப்புகள் ஒரு மொழியில் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக தமிழ் மக்கள் மட்டுமன்றி சில சில சமயங்களில் சிங்கள மக்களும் அசௌகரியங்களுக்கு ஆளானார்கள். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய புகையிரத அறிவிப்புகளை அரச கரும மொழிக் கொள்கைக்கு அமைவாக மேற்கொள்வதற்கு சம்பந்தபட்ட அதிகாரிகள் சம்மதித்துள்ளனர்.

பாடசாலைப் பெயர்ப்பலகைகள்

அரச கரும மொழிகள் தொடர்பான



அறிவினை பாடசாலை வாழ்க்கையிலிருந்தே பிள்ளைகளுக்கு வழங்குவதன் மூலம் அது தொடர்பாக ஏற்படக் கூடிய பிரச்சினைகள் அவர்கள் எதிர்காலத்தை பொறுப்பேற்கவுள்ள சந்ததியினர் என்ற காரணத்தால் தீர்த்து வைக்கப்படுகிறது. அதற்கமைய அப்பணியினை பாடசாலை பெயர்ப் பலகையிலிருந்து ஆரம்பிப்பதற்கு நாம் மேற்கொண்ட முயற்சியின் பலனாக தேசிய பாடசாலைகளின் பெயர்ப் பலகைகளை மும்மொழியில் காட்சிப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

வானிலை எதிர்வு கூறல்கள்

அவ்வாறே அன்றாட வானிலை பற்றிய தரவுகளை தனது சொந்த மொழியில் அறிந்து கொள்வதற்காக நாம் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கு அமைய வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு முன்பாக உள்ள வானிலைத் தரவுகளை உள்ளடக்கிய அறிவித்தல் பலகையினை மும்மொழிகளில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

பொது மக்கள் அறிவித்தல் பலகைகள்

தேசிய ரீதியல் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடம் தொடர்பான தகவல்களை தனது சொந்த மொழியில் தெரிந்து கொள்வதற்கான பாதையை மக்களுக்காக திறந்து விடுவதற்காக எம்மால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய குமண தேசிய பூங்காவின் பொது மக்கள் அறிவித்தல் பலகையினை மும்மொழியில் காட்சிப்படுத்துவதற்கு அதிகாரிகள் இணங்கியுள்ளனர்.

சிங்களப் பிரஜைகளின் பிரச்சினைகள்

மொழி உரிமைகள் மீறப்படல் தமிழ் மக்கள் மாத்திரமின்றி சிங்கள் மக்களும் எதிர்நோக்கும் பல்வேறு சந்தர்ப்பங்கள் அவதானிக்"கப்பட்டுள்ளது. அது தொடர்பிலான முறைப்பாடுகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய திருகோணமலையில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவாளர் அலுவலகத்தினால் வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ்கள் தமிழ் மொழியில் மாத்திரம் வழங்கப்படுவதல் தொடர்பில் ஏற்புடைய அதிகாரிகள் சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளில் பிறப்பு, இறப்புக்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் இருவரை பிரத்தியேகமாக நியமித்துள்ளனர்.

பொலிஸ் கண்காணிப்புகள்

வடக்கு, கிழக்கு, மத்திய பிரதேச சபை மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான கண்காணிப்பு பணிகள் தொடர்பில் விநியோகிக்கப்படும் ஆவணங்கள் சிங்ள மொழியில் மாத்திரம் வெளியிடப்படல் தொடர்பில் பொலிஸ் அதிபர் எதிர்காலத்தில் அரச கரும மொழிக் கொள்கைக்கு அமைவாக செயற்படுவதற்கு இணங்கியுள்ளார்.

அவ்வாறே அரச நிறுவனங்கள் பலவற்றினால் தமிழ் மொழியினைப் பயன்படுத்தும் அரச மற்றும் பொது நிறுனங்களுக்கு அரச கரும மொழிக் கொள்கைக்கு அமைவாக கடிதங்களை அனுப்பாமை காரணமாக தமிழ் மொழியினைப் பயன்படுத்தும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிய பல்வேறு சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. .

அதற்கமைய பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு மறந்து போன அரச கரும மொழிக் கொள்கையினை ஞாபகப்படுத்தி நாம் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கு அமைவாக ஏற்புடைய அதிகாரிகள் அது தொடர்பான சகல ஆவணங்களையும் அரச கரும மொழிக் கொள்கைக்கு அமைவாக தயாரிப்பதாக அறிவித்துள்ளனர்.

நுகர்வோர் உரிமைகள்

அவ்வாறே நுகர்வோர் உரிமைகள் தொடர்பில் மொழி உரிமை மீறப்படலிநூடாக தான் பயன்படுத்தும் பண்டம் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள முடியாது போனதன் காரணமாக நுகர்வோர் பாரிய அனர்த்தங்களை எதிர்நோக்கிய சந்தர்ப்பங்களை நாம் கண்காணித்துள்ளோம். அதற்கமைய நுகர்வோருக்கு உள்ள உரிமையினைப் பாதுகாத்து உறுதி செய்து அது தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய நிறுவனங்களுக்கு விழிப்புணர்வூட்டி எம்மால் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நான்காம் கட்டம்.

அவ்வாறே நான்காம் கட்டத்தின் கீழ் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குவிடமும், அரச கரும மொழிகள் ஆணைக் குழுவிடமும் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் சில கீழே காட்டப்பட்டுள்ளன. இவ்வனைத்து முறைப்பாடுகள் தொடர்பாக தற்பொழுது விசாரனை மேற்கொள்ளும் மட்டத்தில் உள்ளது.

- பொலிஸார் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்று அதற்குப் பதிலாக வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்தை தமிழ் மொழியை மாத்திரம் உபயோகிக்கும் நபர்களுக்கு சிங்கள மொழியில் குறிப்பிட்டு வழங்கப்படல் தொடர்பான முறைப்பாடுகள்.
- கோட்டை, மாங்குளம், மொனராகலை, காங்கேசன்துறை மற்றும் வவுனியா தெற்கு ஆகிய அதிகாரப் பிரதேசங்களுக்கு உட்பட்ட வீதிகளின் பெயர்ப் பலகைகள் மும்மொழிகளில் காட்சிப்படுத்தாப்படாமை தொடர்பான முறைப்பாடுகள்.
- மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விநியோகிக்கப்படும் சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவம் சிங்கள மொழியில் மாத்திரம் அச்சிடப்படல் தொடர்பான முறைப்பாடு.
- தம்புள்ள பிரதேச சபைக்கு உட்பட்ட சீகிரியா வரலாற்று பிரசித்தி பெற்ற இடத்தை குறிக்கும் பெயர்ப்பலகைகள் பல தமிழ் மொழியில் பிழையாக குறிப்பிடப்படல் தொடர்பான முறைப்பாடு.
- அரச வங்கிகளிலும் தனியார் வங்கிகளிலும் தனியார் வங்கிகளிலும் வங்கிக் கணக்கு ஆரம்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம் மும்மொழிகளில் காணப்படாமை தொடர்பான முறைப்பாடுகள்.
- 7 அரச அமைச்சுக்களினதும் 3 அரச திணைக்களங்களினதும் உத்தியோக பூர்வ இணையத்தளங்களின் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும்

தகவல்கள் மும் மொழிகளில் காணப்படாமை தொடர்பான முறைப்பாடுகள்.

- ரிச் லைப் டயரிஸ் கம்பனி எனும் வர்த்தக நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள ரிச் லைப் வெனிலா பால் எனும் பானம்.
- சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் பீஎல்சீ எனும் நிறுவனத்தினால் இலங்கையின் சந்தைக்கு விடப்பட்டுள்ள ஆப்பிள் பழச்சாற்றுடனான கிறீன் ரீ பானம்.
- லிஸ்கா கௌரீஸ் பிரைவேட் லிமிடட் எனும் வர்த்தக நிறுவனத்தினால் இலங்கைச் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள எம் டி கலப்பு பழக்கங்கள் உள்ளடங்கிய ஜேம் உற்பத்திப் பொருள்.
- யுனிலவர் ஸ்ரீ லங்கா லிமிடட் எனும் வர்த்தக நிறுவனத்தினால் இலங்கைச் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள எஸ்ட்ரா குட் ஸ்டாட் எனும் உற்பத்திப் பொருள்.
- மில்கோ பிரைவேட் லிமிடேட் எனும் வர்த்தக நிறுவனத்தினால் இலங்கையின் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள ஹைலன்ட செட் யோகட்.
- ஹறும் கோல்டின்ஸ் பிரைவேட் லிமிடட் எனும் வர்த்தக நிறுவனத்தினால் இலங்கைச் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள டிறிம் றொன் ப்ரொபெஷனல் ஹெயார் கலர் எனும் உற்பத்திப் பொருள்.
- சிலோன் அக்ரோ இன்டஸ்டிரீஸ் லிமிடெட் எனும் வர்த்தக நிறுவனத்தினால் இலங்கைச் சந்தைக்கு விநியோகிக்கப்படும் பிரீமா ட்ரீட் சிக்கன் மீட் போல்ஸ் ஆகிய உற்ப்திப் பொருட்களின் உள்ளடக்கம் தொடர்பான விபரங்கள், உற்பத்தி திகதி, விலை, காலாவதியாகும் தினம், பாவனை தொடர்பான அறிவுறுத்தல்கள் போன்ற நுககர்வோருக்குத் தேவையான தகவல்கள் தமிழ் மொழியில் குறிப்பிடப்படாமை தொடர்பான முறைப்பாடுகள்.

அதற்கமைய இம் முயற்சியானது சிவில் அமைப்பின் பணிப் பொறுப்பினையும் மிஞ்சிய ஒட்டு மொத்த மக்களின் உரிமைகள் மற்றும் அவற்றின் நன்மைகள் என்பவற்றை மக்களுக்கு கிடைக்கச் செய்வதற்கு நாம் மேற்கொண்ட முயற்சியின் பயனை ஒட்டு மொத்த சமூகமும் எதுவித குறைவு மின்றி அனுபவிக்கிறது. என நாம் நம்புகின்றோம். அவ்வாறே கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆனைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம் நாட்டில் வாழும் மக்களிடையே நல்லிணக்கத்தை விருத்திய செய்ய நாம் மேற்கொண்ட இம் முயற்சி அப்பரிந்துரைகளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு பாரிய பங்களிப்பினை ஆற்றுகிறதென்பதனை குறிப்பிடுதல் வேண்டும். ஏனெனில் சில சமயங்களில் தமிழ் பிரசை ஒருவரின் மொழி உரிமை மீறப்பட்டதாக சிங்களப் பிரசைகள் எமக்கு அறிவிப்பதன் காரணமாக இனங்களுக்கிடையே நல்லிணக்கச் செயற்பாடு விருத்தியடைந்துள்ளதெனக் கூறலாம்.

இவ்வாறாக அரச துறையிலும் தனியார் துறையிலும் (நுகர்வோர்) பிரஜைகளின் மொழி உரிமைகள் மீறப்படல் தொடர்பாக விழிப்புணர்வூட்டி சனநாயக நாடொன்றின் பிரசைகளுக்கு உள்ள தனது சுய மொழியில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிமையை வலுவடையச் செய்வதற்கு இக் கருத்திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்கையில் தமிழ் பிரசைகளின் மொழி உரிமைகளைப் போன்றே சிங்களப் பிரசைகளின் மொழி உரிமைகளும் மீறப்பட்ட சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாக இருந்ததுடன் சில வகையான மீறல்கள் தனிப்பட்ட மக்களது வாழ்வின் மீது பாரதூரமான தாக்கத்தினை ஏற்படுத்தும் விதமான மீறல்கள் ஆகும் என்பதும் குறிப்பிடப்படல் வேண்டும். அதற்கமைய தனது சொந்த மொழியில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தகவல்களை அறிந்து கொள்வதற்கும் உள்ள உரிமையானது தனி நபரின் உரிமையாகப் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.

நாட்டின் சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ள அரச கரும மொழிக் கொள்கையானது அமுல்படுத்தப்படுவதில் குறைப்பாடுகள் நிலவுவதாக எமக்கு அறிவிக்கப்பட்ட நிகழ்வுகளின் மூலம் உறுதியாகிறது. அவ்வாறே இக் கொள்கை அமுல்படுத்தப்படும் போது ஒரு சில பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கூட போதியளவு தங்களிடம் வளங்கள் இல்லை எனக் கூறி பொறுப்புகளிலிருந்து நழுவுவதற்கு முயற்சியளிப்பதனையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். அதன் போது பிரசையின் மொழி உரிமையானது பாரதூரமான ஒரு நெருக்கடியாக மாறுவதனைத் தடுக்க முடியாது.

மொழி உரிமை தொடர்பான முறைப்பாடுகள் பலவற்றை மீளாய்வு செய்து பார்க்குமிடத்து அப் பிரச்சினைகள் எவ்வளவு தூரம் பிரசைகள் பற்றிய கூருணர்வு கொண்டவை என்பது தெளிவு.

இம் மொழி மீறப்பட்டமையினூடாக பல்வேறு நபர்கள் தமது வாழ்வின் பெறுமதி வாய்ந்த வாய்ப்புக்களையும் இலக்குகளையும் நிறைவேற்ற முடியாமல் போன கவலையான சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. குறித்த இவ் அனைத்து நிலைமைகளையும் அனுகி பிரஜைகளின் வாழ்வினை வலுவடையச் செய்வதற்கான கட்டாயமான மொழி உரிமைகளைப் பாதுகாப்பதற்கு கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வேண்டியப ல்வேறு நடவடிக்கைகள் காணப்படுகின்றன. அதற்கான விரிவானதொரு செயற்பாட்டின் தேவை உணரப்பட்டுள்ளது. அது ஒரு தனித்த செயற்பாடு அல்ல.

தற்போதுள்ள நெருக்கடிகளை நிவர்த்தி செய்து அரச மற்றும் தனியார் துறையின் பொறிமுறையின் ஊடாக பிரசையின் மொழி உரிமையை பாதுகாப்பதற்கு தம்மை அர்ப்பணித்த அனைத்து சிவில் அமைப்புகளும் செயல் ரீதியான தலையீடுகளை அதில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. கடந்த நான்கு ஆண்டு காலம் அவ்வாறான அனுபவங்கள் நிறைந்த ஆண்டுகளாகும். ஆயினும் இன்னும் பல பணிகள் மீதியாகவுள்ளது.



மொழி உரிமைகள் தொடர்பான நூல்கள்

சிறுபான்மையினரின் மொழி உரிமை மேம்படுத்தகையில் "தனக்கும் மொழி உரிமை உண்டு எனும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அதுபற்றிய அறிவை அவர்களுக்கு வழங்குவதும் மிகவும் முக்கியமானதாகும்.அதன் போது சிறுபான்மை மக்களின் மொழி உரிமை மேம்பாடு தொடர்பில் 2011 முதல் 2014 வரையிலான நான்காண்டு காலத்தினுள் மாற்றுகொள்கைகளுக்கான நிலையத்தின் பிரஜைகள் பங்கேற்பு பிரிவினால் வெளியிடப்பட்ட பல்வேறு வகையான துண்டுப்பிரசுரங்கள் ஆவணங்கள் மற்றம் நூல்கள் என்பன தொடர்பான ஒரு விவரணத்தில் ஈடுபடுவது காலத்தின் தேவையாகவுள்ளது.

பல்வேறு இனங்களுக்கிடையியே மனிதத்தன்மையில் வேறுபாடு காணப்படாத போதும் அவர்கள் பயன்படுத்தும் மொழிகள் வேறுபடுதல் இயற்கையானதாகும்.அவ் வேறுபாடு எதுவாக இருந்தாலும் எந்தவொரு மனிதனும் மனிதாபிமானம் தொடர்பான அடிப்படையான கூற்றுக்களை தனக்கே உரித்தான மொழியிலேயே வெளியிடுகின்றனர்.

இந்நிலைமை தொடர்பாக ஆழமாகக் கலந்துரையாடும் ஒரு நூலாக சட்டத்தரணி எஸ்.ஜி.புஞ்சிஹேவா அவர்களின் மனிதாபிமானம் எனும் நூலினை அறிமுகப்படுத்தலாம்.மொழியின் மூலம் உணர்த்தப்படும் மனிதாபிமானத்தின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தி திரு. எஸ்.ஜி.புஞ்சிஹேவா அவர்கள் தனது நூலின் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார் "மொழிக்கு மதிப்பளித்தலானது அவர் மதிக்கப்படுகிறார் என்பதுடன் ஒருவரது மொழியினை அவமதித்தலானது அவர் அவமதிக்கப்படகிறார்".மொழியானது மனிதாபிமானத்தின் செல்லுபடிக்கு மேலதிகமாக இலங்கையில் மொழித்தொடர்பான அரசியல் சமூக சட்டரீதியான மாற்றம் வரலாற்று ரீதியாக பரப்புதல் செயன்முறை பற்றிய ஒரு விளக்கத்தினைத் தருகிறது.

மொழியுடன் தொடர்புபட்ட நிருவாக மற்றும் பல்வேறு பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடும் ஒரு நூலாக கலாநிதி.தேவநேசன் நேசையாவின் இலங்கையின் தமிழ் மொழி உரிமைகள் எனும் நூலை அறிமுகப்படுத்தலாம்.

இந் நூலின் மூலம் தமிழ் மக்களின் மொழி உரிமைகள் நிர்ணயிக்கப்படும். வரலாற்று ரீதியான விரிவாக்கல் செயன்முறை தொடர்பாகவே அடிப்படை அவதானஞ் செலுத்தப்படுகிறது.

குறித்தொதுக்கப்பட்ட முகவரி இல்லாமையின் காரணமாக கடிதங்கள் கிடைப்பதிலுள்ள ஒழுங்கீனம் காரணமாக தனது முகவரிகள் ஸ்திரமற்ற நிலைமை காரணமாக பசறை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வாழும் தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நிரந்தர முகவரிகளைப் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் 2013 ஜூலை மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவ்வேலைத்திட்டத்தின் தகவல்களும் அனுபவங்களும் 2013 டிசம்பர் மாதம் 10 ஆந் திகதி மனித உரிமைகள் தினத்தையொட்'டி வெளியீடு செய்யப்பட்டது.அதுதான் விலாசம் ஆகும்.முகவரி அந்த பசறை தோட்டத் தொழிலாளர்கள் அனுபவித்த பல்வேறு விதமான இன்னல்கள் காரணமாக கட்டியெழுப்பப்பட்ட ஆவணம் சார்ந்த உரையாடலே இந் நூலின் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறே இலங்கை மக்களின் மொழி உரிமை தொடர்பான புரிந்துணர்வினையும் அறிவினையும் மேம்படுத்தும் நோக்கில் துண்டுப் பிரசுரங்கள் சிலவும் வெளியிடப்பட்டன. அதன் போது பிரசுர இலக்கம் 01 இன் கீழ் தமது தாய்மொழிப் பாவனையானது எவ்வாறு மனித உரிமையாகிறது என்பது பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது. பிரசுர இலக்கம் 02 இன் கீழ் சுயமொழிக் கோரிக்கையின் பல்வேறு கட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது. பிரசுர இலக்கம் 04 இன் கீழ் 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் பின் தமிழ் மொழிப்பாவனை தொடர்பான சட்டம் பற்றி முக்கிய கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் புதிய குடியரசு உருவாகியதன் பின்னர் ஏற்பட்ட மாற்றம் 1978 ஆம் ஆண்டில் அரசியலமைப்பில் மொழி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சட்டரீதியான ஏற்பாடுகள் தற்போதுள்ள மொழிதொடர்பான சட்டங்கள் யாவை? .... மற்றும் இறுதியாக மொழி உரிமைகள் மீறப்படல் தொடர்பான பணிப்பொறுப்புகள் என்பன தொடர்பாக முறையே 4,5,6 மற்றும் 7 ஆகிய இலக்கங்களின் கீழ் அவதானஞ் செலுத்தப்பட்டிருந்தது.

இப் பிரசுரங்களுக்கு மேலதிகமாக பருவ வெளியீடாக வாசகர் பெருமக்களை அறிவூட்டும் ஓர் ஊடகமாக "விபாஷா" செய்திமடல் இதுவரை வெளியிடப்பட்டுள்ளது. மொழி உரிமைகள் தொடர்பாக நடைமுறைத் தகவல்கள் பற்றி மக்களுக்கு அறிவூட்டுவதே இதன் முக்கிய நோக்கமாகக் காணப்பட்டது. அங்கு கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்களுள் சிறுபான்மை மக்களின் மொழி உரிமைகள் தொடர்பான சட்ட சமூக அரசியல் சார்ந்த விடயங்கள் மொழிப் பிரச்சினைகள் மொழி அனுபவம் பல்லின மக்களிடையே மொழி ரீதியான அடையாளத்தைக் கட்டியெழுப்புதல் என்பன முக்கியம் பெற்றன. அவ்வாறே மொழி உரிமைகள் தொடர்பான போராட்டத்தின் மூலம் நாம் பெற்ற வெற்றிகளைப் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான அறிக்கைகள் மொழி தொடர்பாக இடம்பெற்ற நடைமுறை மாற்றங்களாகும். மொழி உரிமைகள் பற்றி ஊடகத் துறையில் ஆரம்பத்தில் அவதானம் செலுத்தப்படாததன் குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு விபாஷா செய்திமடல் மக்களிடம் விநியோகிக்கப்பட்டது.

சுதர்ஷனி குமாரி
தமுனுபொல

சர்வதேச தாய் மொழித் தினம்... வங்காள தேசத்திற்கு மறந்து போன (ஊர்வலம்)



பெப்ரவரி 21 ஆம் திகதி வங்காள தேசத்திற்கும் முழு உலகிற்கும் ஒரு விசேட சந்தர்ப்பத்தை நிலைநாட்டிய ஒரு தினமாகும். ஆயினும் துரதிர்ஷ்டவசமாக பெரும்பாலும் அதைபற்றி கதைக்கப்படாததைப் போன்றே இது பூகோள சமூகத்தின் கோணத்திலிருந்து நோக்கப்படும் போது வங்காளதேசம் போன்ற கீழ்ப்படியான நடுநிலை தேசத்திற்கு பெப்ரவரி 26 ஆம் திகதியானது தமது இனத்தின் வரலாற்றில் கவனஞ் செலுத்தப்படக் கூடிய வரலாற்று ரீதியான ஒரு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. தமது இனத்தைச் சேர்ந்த மக்களையும் பிரஜைகள் என்ற வகையில் தமது உரிமைகளை வெளிப்படுத்தும் தொடர்பாடலில் ஆர்வமில்லாத போதும் அவர்களது உரிமைகளை எதிர்த்து நின்ற இளைஞர்களின் போராட்ட அனுபவத்தினை குறிப்பதாக நாம் கூறலாம். மொழி உரிமைகளுக்காக மேற்கொள்ளபட்ட நம்பமுடியாத தலையீடு காரணமாகவே இப் போராட்டத்தின் போதான வங்காளதேசத்தின் வரலாறு மிகவும் முக்கியம் பெறுகிறது.

1947 இல் இந்தியா பிரிந்து சென்றதிலிருந்து பல ஆண்டுகளை பாகிஸ்தான் பிரதானமாக வங்காள மொழி பேசிய மக்களை பாகிஸ்தான் அரசாங்கம் சீரான முறையில் மாற்றத்திற்கு உட்படுத்தியது. இதற்கான சட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டபோது முடிவாக நாட்டின் சனத்தொகையில் பெரும்பான்மை மக்களாக வங்காள மொழி பேசும் மக்கள் மாறினார்கள்.

நாட்டின் ஒரேயொரு அரசகரும மொழியாக உருது மொழி பேசும் மக்கள் கூறும் நிகழ்வே அதற்கு காரணமாகும். இதன் மூலம் இடம்பெற்ற நிகழ்வுகளைப் பார்க்கும் போது இந் நிகழ்வினை சாதாரணமாகக் கருத முடியாது. அதாவது இந் நிகழ்வு மூலம் வங்காள சமூகத்தினரிடையே அவர்களது மொழியை ஏற்றுக்கொள்ளல் சட்டங்கள் அங்கீகரிக்கப்படாமை என்பன மூலம் அவர்களது அடையாளம் மரபு மற்றும் கலாச்சாரம் என்பவற்றை பாதுகாக்கவில்லை என்ற உணர்வு மேலெழுந்தமைக்கு காரணமாகும். இவ் உணர்வு மனங்களில் தோன்றியதைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள் இம் மக்களுக்கு எதிரான.... கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தனர். வங்காள மொழியினையும் உத்தியோகப்பூர்வ மொழியாக வெளியிடுமாறு கோருவதே 1952 ஆம் ஆண்டு டாக்கா நகரில் வீதியில் இறங்கிப் போராடியவர்களின் கோரிக்கையாக இருந்தது.

வீதியில் குதித்த மக்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பலிவாங்கல் எவ்வாறென்பது எதிர்ப்பாளர்கள் பலர் கொலைசெய்யப்பட்டதென்பதிலிருந்து தெளிவாக புலப்படுகிறது. அதன் வண்ணம் 1956 ஆம் ஆண்டளவில் இச் செயன்மறையின் (மக்களது எதிர்ப்பின்)விளைவாக வங்காள மொழியும் பாகிஸ்தானின் உத்தியோக மொழிகளுள் ஒன்றாவதற்குரிய சட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

இந் நிகழ்வு இடம்பெற்று பல ஆண்டுகள் கடந்துள்ள போதும் வங்காளதேசம் இன்னும் கூட உத்தியோக மொழி தினமாக பெயரிடப்படும் தினத்தில் அவ் உத்தியோக மொழிக்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களும் நினைவு கூரப்படுகின்றனர்.2002 ஆம் ஆண்டு யுனெஸ் கோவினால் சர்வதேச தாய் மொழி தினமாக பெப்ரவரி 21 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டதனால் உண்மையில் வங்காளதேசத்தில் உயிர்த்தியாகம் செய்த இளம் வீரர்கள் மக்கள் மனங்களில் இடம்பிடித்துள்ளனர்.அதன் வண்ணம் இவ்விரண்டு நிகழ்வுகளையும் அடிப்படையாகக்கொண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி பூகோள மொழித் தினமாக நினைவு கூறப்படுகிறது. நாளை உதயமாகும் உலகின் பரம்பரையினர் பேசும் அனைத்து மொழிகளும் 50% இற்கும் அதிகமான அளவு தற்போது அழிவடைந்து வருவதுடன் அத்தாய் மொழியைப் பாதுகாப்பதற்காக நவீன உலகம் கூடுதல் அவதானஞ் செலுத்தியுள்ளது. அதன் போது சர்வதேச தாய் மொழித்தினத்தில் உலகம் பூராகவும் வெகு விமர்சையாக வீரர்கள் தினத்தில் மாத்திரம் மனிதர்கள் தமது தாய் மொழியைப் பாதுகாத்தல் ஏற்றுக்கொள்ளல் பற்றிப் பேசுகின்றனர். ஆயினும் அதன் மூலம் மொழி உரிமைகள் குறிப்பிட்ட ஒரு தினத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்படுகின்றதேயொழிய தாய் மொழியானது எதிர்கால..... பாதுகாக்கப்படுவதில்லையென்பது இங்கு ஞாபகமூட்டப்படல் வேண்டும்.

ருவெந்தி வக்வெல்ல

கிராமம் தோறும்

மொழி உரிமை (பதுளை)



பதுளை பசறையில் நடைபெற்ற அரச உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சியின் சில கட்டங்கள்.

கிராமம் தோறும்

மொழி உரிமை (கண்டி)

அமபகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் அரச உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்.

கண்டி மாவட்டத்தின் மொழிப் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சியின் ஒரு கட்டம்.



அம்பகமுவ பிரதேசச் செயலாளர் பிரிவில் அரச உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்.



கண்டி மாவட்டத்தின் மொழிப் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சியின் ஒரு கட்டம்.

மாத்தளை அரச உத்தியோகத்தர்கள் மற்றும் மொழிச்சங்களின் அலுவலர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்.

கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற அரச உத்தியோகத்தர்களை அறிவூட்டுவதற்கான செயலமர்வு.

17 ஆம் பக்கத் தொடர்ச்சி ......

இலங்கையில் முதலாவது சிங்கள தமிழ் மாணவர் இலக்கியக் கலை விழாவின் சில நிகழ்வுகள்.

சிறுபான்மை மக்களின் மொழி உரிமைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் கடந்த சில காலங்களாக இந் நாட்டின் இரு மொழிக் கொள்கையினை உறுதிப்படுத்துமுகமாக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றுள் இந்நாட்டின் பிரஜைகள் சங்கங்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் முக்கியம் பெறுகின்றன. நாடு பூராகவும் மாவட்டங்கள் பலவற்றில் அவ்வாறான பிரஜைகள் சங்கங்கள் கட்டியெழுப்பப்பட்டன. அவ் அமைப்புக்கள் நிறுவப்பட்ட போது எடுக்கப்பட்ட சில புகைப்படங்கள் கீழே காணப்படுகின்றன.